Registered as a Newspaper　　பக்கங்கள் 06　　விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELAANATHAM　　மக்கள் தினசரி　　Peoples Daily

நாதம் 04　　திருவள்ளுவர் ஆண்டு 2024　　ஆவணி 20　　[05-09-1993]　　ஞாயிற்றுக்கிழமை　　ஓசை 199

## தியாகி திலீபன் ஆறாம் ஆண்டு நினைவு நாள்கள் ஏற்பாடுகள்

தியாகி திலீபனின் 6ஆம் ஆண்டு நினைவு நாள்கள் இம்மாதம் 15-ம் திகதி தொடக்கம் 26-ம் திகதி வரை நடைபெறுவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நாள்களில் பொதுமக்களுக்கு நன்மை தரக்கூடிய சிரமதானங்கள், வட்ட ரீதியாக பொது பந்தல்கள் அமைக்கப்பட்டு அடையாள உண்ணா விரதங்கள், நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. கல்லூரிகள், பாடசாலைகள் மட்டத்தில் பதினொரு நாள்களும் மாணவர்கள், ஆசிரியர்கள், படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்துவதோடு நினைவு கூரல் கருத்துரைகளும் நடைபெறவிருக்கின்றன. வட்டத்திற்கு ஒன்று என்ற ரீதியில் நடைபெறும் உண்ணாவிரதம் காலை 7-00மணி (6ஆம் பக்கம் பார்க்கம்)

# போர்க் கலையில் மட்டுமன்றி போராளிகள் சகல கலை நுணுக்கங்களையும் கற்கவேண்டும்

**- தேசியத் தலைவர் பிரபாகரன்**



எமது போராளிகள் போர்க்கலையில் மட்டுமன்றி சகலகலைகளிலும் நுணுக்கங்களை கற்று சகல கலா வல்லவர்களாக உருவாக வேண்டும் என்பது எனது ஆவல். எனது ஆவலை பூர்த்தி செய்யும் வகையில் நீ ஒரு இசைக்கலைஞனாக உன்னை உருவாக்கி எம் போராளிகள் எதையும் சாதிக்க வல்லவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளாய் இசைத்துறையில் உன் முயற்சி வெற்றிபெற என் மனமார்ந்த வாழ்த்துக்கள். இவ்வாறு போராளிக் கலைஞர் தினேஷின் மிருதங்க அரங்கேற்றம் தொடர்பாக தேசியத் தலைவர் வே. பிரபாகரன் வழங்கிய ஆசிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை இந்த மிருதங்க அரங்கேற்றம் இளங்கலைஞர் மண்டப கலா மன்றத்தில் நடைபெற்றது. தலைவர் பிரபாகரனின் ஆசிச் செய்தியை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அரங்கேற்ற நிகழ்வில் வாசித்தார். அவ் ஆசிச் செய்தியில் மேலும், இன்று உமது மிருதங்க அரங்கேற்றம் நிகழ்வதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். மிக குறுகிய காலத்தில் இசைக்கலையை பயின்று மேடையேறும் அளவுக்கு திறமை பெற்ற உமது முயற்சியை நான் பாராட்டுகிறேன் என்று தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெற்ற இவ்வரங்கேற்ற நிகழ்வில் யாழ் மாவட்ட சிறப்பு தளபதி செல்வராசா, மகளிர் படையணி சிறப்பு தளபதி செல்வி ஜெனா ஆகியோர் மங்களவிளக்கேற்றினர். கலை பண்பாட்டுக்கழகதுணைப் பொறுப்பாளர் சேரலாதன் வரவேற்புரையாற்றினார். தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் போராளி தினேசையும், இசைக் கலைஞர்களையும் பரிசுகள் வழங்கி கௌரவித்தார். வாழ்த்துரைகளை கலைப்பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, வணபிதா யோசப் மைக்கல் அடிகளார் ஆகியோரும் மதிப்புரையை பிரம்மஸ்ரீ வீரமணி ஐயரும் நிகழ்த்தினர்.

## மட்டக்களப்பில் அதிரடி

# வீதிக் காவல் புரிந்த மூன்று பொலிசார் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் வீதிக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா பொலிசார் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று பொலிசார் பலியாகினர். இவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் மட்டக்களப்புப் பகுதியில் பட்டிருப்பு-வெல்லாவெளி பிரதான வீதியில் காவல் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சிறி... லினால் மூன்று பொலிசார் அந்த இடத்திலேயே பலியாகினர். இத் தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப்புலிகள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை

### கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

நேற்று முன்தினம் மட்டக்...

★ ரி56-I- 03

## கிளாலி–பூநகரி படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை நாளையும், நாளை மறுதினமும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்த்துறை பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## எறிகணை வீச்சு

(தென்மராட்சி)

பூநகரி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன் தினம் இரவு கிளாலிக் கரையை நோக்கி ஷெல் தாக்குதல் இடம் பெற்றது.

இதேவேளை கடலில் கடற்படையினர் படகில் இருந்து கிளாலியை நோக்கி 50 கலிபர் தாக்குதலை நடத்தினர் எனினும் சேதம் ஏற்படவில்லை.

(86)

## சுதந்திரப்பறவைகள் வெளிவருகிறது

## பருத்தித்துறை துறைமுகத்தில்

# பொருள்கள் இறக்கும் இன்று ஆரம்பமாகும்!

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்தில் இன்று மீண்டும் கப்பலில் இருந்து அத்தியாவசியப் பொருள்கள் இறக்கும்பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் "குமாரி" கப்பல் இன்று காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைவதுடன், சில தினங்கள் தடைப்பட்டிருந்த இவ் இறக்கும் வேலைகள் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். குடாநாட்டுக்குத் தேவையான அத்தியாவசிய... டது. அதேவேளை காங்கேசன் துறை துறைமுகத்தில் தரித்து... துறைமுகத்தை நோக்கிப் புறப்படும்.

# மூன்று பொலிசார் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் வீதிக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா பொலிசார் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று பொலிசார் பலியாகினர். இவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் மட்டக்களப்புப் பகுதியில் பட்டிருப்பு-வெல்லாவெளி பிரதான வீதியில் காவல் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சிறிலங்கா பொலிசார் மீது கோவில் போரதீவு உறுகாமம் என்ற பகுதியில்வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலினால் மூன்று பொலிசார் அந்த இடத்திலேயே பலியாகினர். இத் தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப்புலிகள் தரப்பில் சேதம் எதும் ஏற்படவில்லை.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

நேற்று முன்தினம் மட்டக்களப்பில் வீதிக்காவலில் ஈடுபட்டிருந்த பொலிசார் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது பொலிசாரிடமிருந்து விடுதலைப் புலிகளால்

- ★ ரி56 - I - 03
- ★ ரவைக் கூடுகள் - 04
- ★ ஐ. எம். ரவைகள் - 113
- ★ தொலைத் தொடர்பு சாதனம் - 01

என்பன கைப்பற்றப்பட்டன.

## பொன்னாலை கடல்நோக்கி எறிகணை வீச்சு

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் ஊரிமுனங்குத்துறையிலுள்ள தமது காவல்நிலைகளிலிருந்து நேற்றுக்காலை 7.20 மணியளவில் பொன்னாலை கடற்பரப்பினை நோக்கி எறிகணை வீச்சினை மேற்கொண்டனர்.

காலை 9.25 மணியளவில் தும்பிப்பிட்டி, சுருவாபிச் காவல்நிலைகளிலிருந்தும் எறிகணை வீச்சினை சுழிபுரம், சவுக்கடிப் பகுதிகளை நோக்கி மேற்கொண்டனர். இவ்விரு சம்பவங்களிலும் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரியவருகிறது. (41)

## ஹெலி நோட்டம்

சிறிலங்கா வான்படையின் குண்டுவீச்சு விமானம்ஒன்றும், உலங்கு வானூர்தி ஒன்றும் நேற்று முற்பகல் 11 மணியளவில் வலிமேற்குப் பகுதிகளின் மக்கள் குடியிருப்புக்களை நோட்டம் இட்டுச் சென்றன.

நண்பகலளவில் சாவகச்சேரி பகுதியிலும் உலங்கு வானூர்தி ஒன்று வட்டமிட்டு நோட்டமிட்டு சென்றது. (41. 86)

## சவுக்கடித் துறையில் மீனவர் மீது பீரங்கி தாக்கு

[தெல்லிப்பழை]

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த மீனவர்கள் ஒன்பதுபேர் நேற்றுக் காலை 7 மணியளவில் சவுக்கடித்துறைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தவேளை இரு விசைப் படகுகளில் வந்த சிறிலங்கா கடற்படையினர் பீரங்கி தாக்குதலை மேற்கொண்டனர்.

அவ்வேளை அவர்களின்

[ 6 ஆம் பக்கம் பார்க்க ]

## மீனவர் மீது சூடு

கல்முனை-பூநகரி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை மீன் பிடித் தொழிலுக்குச்சென்ற மீனவர்கள் மீது சரமாரியாகத் தொடர்ந்து பத்து நிமிடங்களுக்கு மேலாகத் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

## டோறா படகு தகர்ப்பில்

# பலியான அதிகாரிகள் விபரம் வெளியிடப்பட்டது

(கொழும்பு)

கடந்த 29 ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்பில் கடற்கரும்புலிகளால் தகர்க்கப்பட்ட கடற்படையினரின் சுப்பர் டோறா படகிலிருந்த நான்கு கடற்படை அதிகாரிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் கடற்படை லெப்டினன்ட் தரத்தைச்சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தில் தகர்க்கப்பட்ட டோறா ரோந்துப் படகின் கட்டளை அதிகாரி லெப். விமலவீர, பின் பொறியியல் அதிகாரி லெப். சேனநாயக, லெப். புஞ்சிஹேவா பணிகளுக்கு பொறுப்பான சப் லெப்டினன்ட் புஞ்சிஹேவா ஆகியோரே கொல்லப்பட்ட நான்கு அதிகாரிகளுமாவர்.

இந்த டோறா படகில் பயணம் செய்து கொண்டிருந்த லெப். திலகரட்ன என்ற கடற்படை அதிகாரி படகு கரும்புலிகள் தாக்குதலுக்கு இலக்காவதற்கு சற்று முன்னரே வேறு ஒரு படகில் ஏறிக்கொண்டதால் உயிர்தப்பிக்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. புஞ்சிஹேவா என்ற பெயருடைய இரு அதிகாரிகளும் வேறு ஒரு படகில் ஏறிக்கொள்வதற்கு முன்பாக டோறாப் படகு தாக்கப்பட்டமையினால் கொல்லப்பட்டனர்.

கிளாலி கடலிலும் பருத்தித்துறை கடலிலும் கடற்புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் சிறிலங்காகடற்படைக்கு நான்கு தினங்களினுள் 73 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வாய்த்துறை பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## எறிகணை வீச்சு

(தென்மராட்சி)

பூநகரி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன் தினம் இரவு கிளாலிக் கரையை நோக்கி ஷெல் தாக்குதல் இடம் பெற்றது.

இதேவேளை கடலில் கடற்படையினர் படகில் இருந்து கிளாலியை நோக்கி 50 கலிபர் தாக்குதலை நடத்தினர் எனினும் சேதம் ஏற்படவில்லை. (86)

## சுதந்திரப்பறவைகள் வெளிவருகிறது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் அதிகார பூர்வ ஏடான 'சுதந்திரப்பறவைகள்' புரட்டாதி மாத இதழ் நாளை வெளிவருகின்றது.

இதில் தெலுங்கானாப் போராட்டத்தில் பெண்கள், வீரவேங்கை குயின்சி, வீராங்கனைகளில் ஒருத்தி, பெண்கள் உங்களுக்காக இங்கே சிலர், கருவிலிருக்கும்பெண்கள் கூடப் பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றார்கள், பெண்களுக்கு எதுவுமே அசாத்தியமானதல்ல என்பது போன்ற பல முக்கிய அம்சங்களை உள்ளடக்கி வெளிவருகின்றது.

## வீரச்சாவு



லெப். ரதீஸ்/மருதன்

நேற்றுக்காலை 6. 30 மணியளவில் அச்சுவேலி கதிரிப்பாய் பகுதி காவலரணிலிருந்து இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் போராளி ஒருவர் வீரச்சாவை தழுவிக் கொண்டார். லெப். ரதீஸ்/மருதன் (தில்லைநாதன் சுதாகரன் இரணை இலுப்பைக்குளம் வவுனியா) என்ற போராளியே வீரச்சாவை தழுவிக் கொண்டவராவார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

# இன்று ஆரம்பமாகும்!

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுகத்தில் இன்று மீண்டும் கப்பலில் இருந்து அத்தியாவசியப் பொருள்கள் இறக்கும்பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் "குமாரி" கப்பல் இன்று காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைவதுடன், சில தினங்கள் தடைப்பட்டிருந்த இவ் இறக்கும் வேலைகள் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். குடாநாட்டுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப்பொருள்கள் இன்று முதல் பருத்தித்துறை துறைமுகத்தில் இறக்கப்படவுள்ளன.

இன்றுகாலை அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு இரு கப்பல்கள் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்து சேரவுள்ளன. திருக்கோணமலைத் துறைமுகத்தில் தரித்து நின்ற "ருஹுணு" என்ற கப்பல் நேற்று மாலை 6.30 மணியளவில் பருத்தித்துறை துறைமுகத்தை நோக்கிப் புறப்பட்டது. அதேவேளை காங்கேசன் துறை துறைமுகத்தில் தரித்து நின்ற "குமாரி" என்ற கப்பல் இன்று காலை பருத்தித்துறை துறைமுகத்தை நோக்கிப் புறப்படும்.

இவ் இரு கப்பல்களும் இன்று

[ 6 ஆம் பக்கம் பார்க்க ]

## வாதுவ விரைவில் வடக்கே வரும்

(கொழும்பு)

ஒரு தொகுதி அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் 'வாதுவ' என்ற கப்பல் மிக விரைவில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ளது.

இக் கப்பல் தற்பொழுது திருக்கோணமலைத் துறைமுக

[ 6 ஆம் பக்கம் பார்க்க ]

# ஜேர்மனி சென்ற அகதிகள் இத்தாலிக் கரை ஒதுங்கினர்

## தாயகம் திருப்பி அனுப்பப்படுவர்

(நமது நிருபர்)

ஜேர்மனியில் சட்டவிரோதமாகக் குடியேறுவதற்கு சென்றுகொண்டிருந்த 40 இந்தியர்களும், இலங்கையர்களும் தென் இத்தாலியில் கரையொதுங்க வேண்டிய நிலை ஏற்பட்டதென்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சைப்பிரஸிலிருந்து சரக்குக் கப்பலொன்றில் சென்ற இவர்கள் றெஜிகலபிரியா என்ற இடத்துக்கண்மையில் இறங்கி உயிர்காப்புப் படகுகள் மூலம் இத்தாலியக் கரையை அடையுமாறு கப்பல் கப்டன் இவர்களைக் கேட்டுக்கொண்டார். ஜேர்மனிக்கு அப்பால் இவர்கள் வந்து சேர்ந்துவிட்டனர் என்று கப்டன் அவர்களிடம் கூறியிருந்தார். கப்டன் யாரென்று இனம் காணப்படவில்லை இப் பயணத்துக்காக 35 இந்தியர்களும், 6 இலங்கையர்களும் கப்டனிடம் தலா 4000

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# கடற்பிரதேச கண்காணிப்பு கடற்படைப் பலம் போதாது

(லண்டன்)

வடபகுதிக் கடற் பரப்பு ஒரு பெரிய நீண்ட பிரதேசம் சிறிலங்கா கடற்படையில் மட்டுப்படுத்தப்பட்ட பலத்துடன், அதுவும் இப்போதுள்ள சில கட்டுப்பாடுகள் மத்தியில்கடற்படை எவ்வாறு பரந்த வாரிய கடல் பிரதேசத்தைக் கண்காணிக்கப் போகிறது என்பது தெரியவில்லை என்று லூசியர் ராஜகருணநாயக்கா பி. பி. சிக்கு தெரிவித்தார்.

சிறிலங்கா கடற்படையை நெருங்கும் படகுகளைத் தாக்கும் அதிகாரம் முன்பும் கடற்படைக்கு இருந்தது. அத்துடன் மிகக் கடுமையான அவசரகாலச் சட்ட விதிகளும் நடைமுறையில் உள்ளன. வடபகுதிக் கடற்பிராந்தியத்தில் மீனவர் மீன் பிடிக்கக் கூடாது என்ற பிரகடனம் கடற் புலிகளின் தாக்குதலின் பின் ஏற்பட்ட உடனடி விளைவாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கடற்புலிகள் முன்னரைவிட இப்போது செயற்பாட்டுத்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் இரண்டரைப் பரப்பு காணியும் வீடும் உடன் குடியிருப்பதற்கு ஏற்ற நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- சி. கஜேந்திரம் C/O என். தில்லைவிநாயகம் பிரசித்த நொத்தாரிஸ். நல்லூர். (5835)

ஒரு மாதத்திற்கு மேற்பட்ட பல இன கோழிகள் முட்டை இடும் தாராக்கள் உடன் விற்பனைக்குண்டு. சந்தசாமி சன்ஸ் 15, ஆடியபாதம் வீதி, நல்லூர் 5832

### பதவி வெற்றிடம்

யாழ்நகரின் மத்தியில் இயங்கி வரும் முன்னணி உணவகத்திற்கு மேலைத்தேய கீழைத்தேய, சைனீஸ் உணவுவகைகள் சிற்றுண்டிகள் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்களும், மற்றும் உணவு பரிமாறுவதில் அனுபவம் உள்ளவர்களும் தேவை. நற்சான்றுப் பத்திரங்கள் அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வரவும் தொடர்பு சுவையருவி. யாழ்ப்பாணம் (சி-7292)

### றெனி மூக்குக்கண்ணாடியகம்

உங்கள் கண்களை பரிசோதித்துச் சரியாக கண்ணாடி வழங்கப்படும் இல. 288, நாவலர் வீதி (யாழ். தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி யாழ்ப்பாணம் (5786)

### தேவை

சிறிய குடும்பத்திற்கு சமையல் வேலை தெரிந்த வீட்டுப் பணியாள்தேவை. ஆண் / பெண் இருபாலாரும் அண்மையில் கிடைக்கப்பெற்ற நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரடியாக சமூகம் தரவும். இல, 10, பழைய பூங்காவீதி சுண்டுக்குளி (ஒல்ட்பார்க் ஓடலுக்கு அருகில். சம்பளம் நேரடியாக பேசித்தீர்க்கலாம். (சி-7342)

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாராவின்

**உணவுப் பார்சல்கள்**

காலை 11-30 மணி முதல்

பகல் 3-00 மணி வரை

### மதுப்பிரியர்களே!

உங்களுக்கு ஓர்புதியஉலகம்! புதுமை - இனிமை - அனைத்து நிறைந்த "மதுச்சாலை" 812 ருக்கித்துறை வீதி. [முத்திரைச் சந்தை] யாழ்ப்பாணம். [5820]

### வைத்திய சேவை

ஆயுர் வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட மருந்து வகைகளையும் குழந்தைகளுக்கான இரந்களண்ணெய் கூந்தல் வளர் தைலங்களையும் பெற்றுக் கொள்ளலாம். வைத்தியர் ஐ. கந்தையா முருகானந்தா வைத்திய நிலையம் பள்ளிவாசல் அருகாமை மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [5824]

### திருமணசேவை

பொருத்தமான மணமகன் மணமகள் எபமிடம் உண்டு தொடர்பு மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம். யாழ்ப்பாணம். சந்திப்பு: ஞாயிறு காலை 5839]

### ஆண்டு 4 பரீட்சை

ஆண்டு 4 [புலமைப்பரிசில் 1994) தொடர் பரீட்சை 05 09 93 ஞாயிறு மு.ப 8.00. மு.ப 11 00 மணி நேரங்களில் நடைபெறும் வினாத்தாள்களையும் பெற்றுக் கொள்ளலாம். மாதிரி வகுப்புகளும் 02 09 93 ஆரம் மாகியுள்ளன புதிய கல்வி நிலையம் 219 நாவலர் வீதி யாழ்ப்பாணம், (சி;7357)

### நெசவுப் பயிற்சி இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம் நெசவுப்பயிற்சிப் பாடசாலையில் 91 92, 93 ஆம் ஆண்டுகளில் பயிற்சி பெற்றவர்களுக்கான இறுதிப்பரீட்சைகள் இம்மாதம் 18 ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய அசாதாரண நிலைமை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட இந்தப் பரீட்சைகள் குறிப்பிட்ட திகதிகளில் நடைபெறுமெனவும், பரீட்சையில் தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [41]

### குரக்கன் கொள்வனவுக்கு நடவடிக்கை

யாழ் மாவட்டத்தின் சகல பகுதியிலிருந்தும் விவசாயிகளின் நன்மை கருதி தீட்டிய குரக்கனை கிலோ 26 ரூபா வீதம் கொள்வனவு செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது இதனை விற்பனைசெய்ய விரும்பும் விவசாயிகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட, கோட்ட, வட்ட தொடர்பாளர் அலுவலகங்கள், உதயம் பல்பொருள் அங்காடி, மதுரம் பாண் தயாரிப்பகம், காமதேனு விவசாயக் கால்நடைப் பண்ணை ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளபபடுகின்றனர்.

உ

## திருக்கேதீசுவர பூசை வழிபாடுகள்

தடைப்பட்டுள்ள வழிபாட்டுத் தலங்கள் மீளத் திறக்கவும்.

[தமிழ் மக்களுக்கு மீட்சியும் சமாதானமும் வேண்டி]

தென்மட்டுவில் வேரற்கேணி

**கந்தசுவாமி கோயில் ஸ்கந்தஷேம மகாசங்க பிஷேகம்**

காலம்: ஸ்ரீ முகவருடம் ஆவணித் திங்கள் 20-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை [5.9 93] காலை 7.00 மணி முதல் கோயில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ ச சோமாஸ்கந்த குருக்கள் தலைமையில் நடைபெறும.

பிரார்த்தனை உரை:

திரு வே, கெ. தனபாலன் ஆசிரியர் [தலைவர் இந்து இளைஞர் பேரவை]

நண்பகல்: மகேசுவர பூசை

# இராணுவ உடையில் கொள்ளையர் கைவரிசை

(கொழும்பு)

இராணுவத்தினர் போன்று உடையணிந்த நால்வர் கொண்ட குழுவொன்று துப்பாக்கி முனையில் வியாபாரி ஒருவரின் வீட்டிலிருந்து சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியுடைய பொருள்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளது

தலாவ நகரில் இடம்பெற்ற இச் சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது: துப்பாக்கி முனையில் வீட்டிலிருந்தவர்களை மடக்கி வைத்திருந்த கோஷ்டியினர் சுமார் 50 000 ரூபா பணத்துடன் ரூபா 30 000 பெறுமதியுடைய நகைகள், மற்றும் மின்சார உபகரணப் பொருள்கள் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றிருப்பதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

### உலர் உணவு விநியோகம்

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கப் பாவனையாளர்களுக்குரிய ஆகஸ்ட் மாத முதல் இரண்டு வாரத்திற்கான இலவச நிவாரண உலர் உணவுப் பொருள்கள் தற்போது சங்க கிளைகளில் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் பாவனையாளர்கள் இம் மாதம் 10-ம் திகதிக்கு முன்னர் தமக்குரிய பொருள்களை பெற்றுக் கொள்ளுமாறும்மேற்படி சங்க தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது. [22]

### ஓய்வூதிய கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான ஆகஸ்ட் மாத கொடுப்பனவு தற்போது அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்பட்டு வருகின்றது. (22)

## பிறந்த நாள் நினைவில்...



**கப்டன் பிரபா**

[தாரணி திருநீலகண்டன்]

(மயிலிட்டி)

பிறப்பு 1969-09-05

வீரச்சாவு 1990-07-21

பிரபா!
இறந்த காலத்தின்
இனிய நினைவுகள்
நெஞ்சத்தில்
அலைமோதுது
உணர்வாகி நீ வாழும்
நிஜத்தினை ஏற்றிட
உறவுகள் மறுக்கின்றது

வருவாய் நீ வருவாய்
என்ற கனவோடு
உள்ளங்கள்
துடிக்கின்றது -எம்
உயிரான உன்னை
எதிர்பார்த்து இங்கே
விழிகள் தவிக்கின்றது.

(சி-7355) -நண்பிகள்

## நினைவு கூருகின்றோம் ...

## 1993-09-05

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் முள்ளைத்தீவு, மாங்குளம், மல்லாவிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட பல தமிழர்கள்.

1985ஆம் ஆண்டு வவுனியாவுக்கும், மதவாச்சிக்குமிடையில சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்ட 35 தமிழர்கள்.

1986ஆம் ஆண்டு அம்பாறை கல்முனைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**அஜந்தன்** (சின்னத்தம்பி குணசிங்கம் - காரைதீவு அம்பாறை)

1987ஆம் ஆண்டு வவுனியா - பன்றிக்கெய்தகுளம் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**இரத்தினம்** (— சிவகுமார் - வவுனியா)

1988ஆம் ஆண்டு மட்டுநகரிலுள்ள முகாமில் வைத்து இந்தியபபடையினரால்படுகொலை செய்யப்பட்ட பெண், இளைஞன் ஆகிய 02 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு திருமலை பன்குளம் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லெப். பாஸ்கர்** (வேலன் பாக்கியம் விஜயகுமார்- காரைதீவு-அம்பாறை)

மாங்குளம் - வன்னிவிளாங்குளம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப் பிரிந்த-

**சண்** (சின்னத்தம்பி புண்ணியமூர்த்தி - வன்னிவிளாங்குளம்- மாங்குளம்)

1990ஆம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட சமரில் விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**லெப். காமன்** (கதிர்காமத்தம்பி ஜெகதீஸ்வரன் -ஏ ஜி.ஏ வீதி, செங்கலடி - மட்டு)

இதே நடவடிக்கையின்போது தனது கைக்குண்டை தானே வெடிக்கவைத்து வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். முத்து** (அழகப்போடி குமார் - மயிலம்பாவெளி மட்டு)

கிளிநொச்சியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மிதிவெடி விபத்தில் எமைப்பிரிந்த-

**பழனி** ( — — கிண்ணியடி-திருமலை)

மாங்குளம் - வவுனிக்குளம் பகுதியில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த-

**சத்தியசீலன்** (துரைரத்தினம் சுரேஸ்குமார் - ஒட்டறுத்தகுளம் - வவுனிக்குளம்)

யாழ் - கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**கேம்நாத்** (ஏகநாதன் விஜியானந்தா - மருதடி, காரைநகர் - யாழ் )

**நிசான்** (செல்லையா சத்தியசீலன் - நாவலர் வீதி, மாதகல் - யாழ் )

யாழ் - மயிலிட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**கமல்** (இராசரத்தினம் ஜீவராஜன் - கீரிமலை வீதி, சித்தன்கேணி - யாழ் )

மட்டுநகரில் கடமைக்குச் சென்று காணாமல்போன தமிழ்ப் பொதுமகன், சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 02 இளைஞர்கள் உட்பட செங்கலடி, ஏறாவூர் உதயநகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 04 தமிழர்கள். கல்லாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 10 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

பணியாளர் தேவை. ஆண் / பெண் இருபாலாரும் அண்மையில் கிடைக்கப்பெற்ற நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரடியாக சமுகம் தரவும். இல. 10, பழைய பூங்காவீதி சுண்டுக்குளி (ஒல்ட்பார்க் ஒட்டலுக்கு அருகில். சம்பளம் நேரடியாக பேசித்தீர்க்கலாம். (சி-7342)


ஜோ. எகட்டனின்

ஜெசித்தாராவின்

## உணவுப் பார்சல்கள்

காலை 11-30 மணி முதல்
பகல் 3-00 மணி வரை
கிடைக்கும்.

மீன் / இறைச்சி
ரூபா 30/-
மரக்கறி ரூபா 25/

மாணவர்களுக்கு
விசேட சலுகை

எல்லாவிதமான உணவு ஓடர்களும் கவனிக்கப்படும்.

**ஜெசித்தாரா**
சுண்டுக்குளி மகளிர்கல்லூரி முன் ஒழுங்கை
சுண்டுக்குளி

[சி 7345]


கந்தசுவாமி கோயில்

## ஸ்கந்தஷேம மகாசங்க பிஷேகம்

காலம்: ஸ்ரீ ஸ்ரீமுகவருடம் ஆவணித் திங்கள் 20-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை [5.9 93] காலை 7.00 மணி முதல் கோயில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ ச சோமாஸ்கந்த குருக்கள் தலைமையில் நடைபெறும்.

பிரார்த்தனை உரை:
திரு வே. கெ. தனபாலன் ஆசிரியர்
[தலைவர் இந்து இளைஞர் பேரவை]

நண்பகல்: மகேசுவர பூசை

மாலை நிகழ்ச்சிகள்
1) திராவிட மரபு வாத்திய இசை
பழனிமலை புதல்வர்கள்
2) வில்லிசை விருந்து
சித்திர வேலாயுதர் குழுவினர் [மீசாலை]
3) தேன் இசை விருந்து
சாந்தன் இசை குழுவினர்
4) சிறப்பு நிகழ்ச்சியாக "நவரச புதுமை"

அடியார்கள் யாவரும் வருகை தந்து தமிழ் மக்களுக்கு மீட்சியும் சமாதானமும் நிலவ பிரார்த்திக்குமாறு அன்பாக வேண்டிக் கொள்கிறோம்.

தென்மட்டுவில் வாழ் மக்களும்,
இந்து இளைஞர் மன்றமும்.

விளம்பர அன்பளிப்பு:
ஸ்ரீகந்தசாமி குடும்பத்தினர்
விளம்பர அமைப்பு "இந்து விளம்பர சேவை"

[5842]

## கப்டன் பிரபா

[தாரணி திருநீலகண்டன்]
(மயிலிட்டி)

பிறப்பு
1969-08-05

வீரச்சாவு
1990-07-21

பிரபா!
இறந்த காலத்தின்
இனிய நினைவுகள்
நெஞ்சத்தில்
அலைமோதுது
உணர்வாகி நீ வாழும்
நிஜத்தினை ஏற்றிட
உறவுகள் மறுக்கின்றது

வருவாய் நீ வருவாய்
என்ற கனவோடு
உள்ளங்கள்
துடிக்கின்றது -எம்
உயிரான உன்னை
எதிர்பார்த்து அங்கே
விழிகள் தவிக்கின்றது.

(சி-7355) -நண்பிகள்

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
27 - 12 - 1968

தாயக மண்ணில்
05 - 09 - 1991

## 2-ம் லெப். டார்லி

[யோசேப் மரியகொறற்றி]

ஈராண்டென்ன ஈர்பத்தாண்டுகள் சென்றாலும்
நீங்காத உன்நினைவை மீட்டியே பார்க்கின்றோம்
வாடாத உன் முகத்தைச் சோராது தேடுகின்றோம்
துள்ளும் நடையழகை எண்ணியே ஏங்குகின்றோம்
'மின்னல், மின்னல்'' என உன் பெயர் சொல்லிக்
கூப்பிட்டுப் பார்க்கின்றோம்
இன்னும் வரக் காணலியே

மணலாற்றுப் போரினிலே குண்டுகளின் இரைச்சலிடையே
மின்னியே மறைந்திட்டாயே
நெற்றியில் செந்நீர்ப் பொட்டுடனே
வீரசுவர்க்கம் எய்தினியே
எம் ஊரின் வீ காவியம் படைத்த முதற் பெண் புலிநீ!

ஐயாவும், அம்மாவும், அக்காவும், அண்ணனவையும் தம்பியும்
உற்றாரும், ஊராரும் உன்நினைவில் வாழுகின்றோம்
அமைதி அமைதி என உன் ஆன்மா சாந்திபெற-நித்தம்
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

உன் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கும்
சற்கோட்டை
அல்வாய் மேற்கு,
அல்வாய்.
-குடும்பத்தினர்.

(சி-7356)

யாழ் - கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

கேம்நாத் (ஏகநாதன் விஜயானந்தா - மருதடி, காரைநகர் - யாழ் )

நிசான் (செல்லையா சத்தியசீலன் - நாவலர் வீதி, மாதகல் - யாழ் )

யாழ் - மயிலிட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

கமல் (இராசரத்தினம் ஜீவராஜன் - கீரிமலை வீதி, சித்தன்கேணி - யாழ் )

மட்டுநகரில் கடமைக்குச் சென்று காணாமல்போன தமிழ்ப் பொதுமகன், சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 02 இளைஞர்கள் உட்பட செங்கலடி, ஏறாவூர் உதயநகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 04 தமிழர்கள். கல்லாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 10 தமிழர்கள.

1991 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

பாபு (கந்தசாமி ஆனந்தம் - கோரக்கல்லிமடு, கிரான் மட்டு)
சூரி (தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம் - கோயில் போரதீவு - மட்டு)
மலையான் (முத்துலிங்கம் செல்வகுமார் - பெரிய போரதீவு - மட்டு)
கலீஸ்ரன் (பரமக்குட்டி ஜெயக்குமார் - ஈச்சந்தீவு - மட்டு)
ஜோசப் (சுப்பிரமணியம் உதயகுமார் - கன்னன்குடா - மட்டு)
பிரசாத் (வடிவேல் ரவி - 3-ம் குறிச்சி, ஆரையம்பதி - மட்டு)
மேஜர் ஜானி (குலசேகரம்பிள்ளை கலைவாணன் சீனன்குடா - திருமலை)
பாபு (கங்கவடிவேல் சசிக்குமார் - மூதூர் - திருமலை)
சுபாதிகா (யேசுமரி வேலுச்சாமி - குச்சவெளி - திருமலை)
லெப். சீமா (இராசலட்சுமி சுந்தரலிங்கம் - முள்ளியவளை - முல்லைத்தீவு)
சந்திரன் (ஆறுமுகம் சண்முகராஜா - 231, புன்னை நீராவி - முல்லைத்தீவு)
மனோகரி (செல்வநிதி சேதுபதி - இராமநாதபுரம - கிளிநொச்சி)
லெப். அப்பி (முத்தையா கணேஸ் - செம்மண் தீவு, முருங்கன் - மன்னார்)
2 ம்லெப். இராவணன்/சுரேஸ் (கதிரவேலு தங்கவேலு இருபாகரன் - கரவெட்டி - யாழ் )
2-ம்லெப். அருள்நங்கை (பிறேமலதா மார்க்கண்டேசர் - ஊறணி வல்வெட்டித்துறை)
2 ம்லெப். டார்லி (மரியகொறற்றி யோசேப் - அல்வாய் தெற்கு - பருத்தித்துறை)
பாரூக் (தனபாலன் சிறீதரன் - நீர்வேலி - யாழ்.)
ரஞ்சித்குமார் (நவரத்தினம் பாலகுமார் - 3-ம் வட்டாரம்- புங்குடுதீவு)
குரு (சண்முகலிங்கம் முகுந்தன் - முல்லைப்புலவு - காரைநகர்)
உமா (பாலரஜனி பரமசிங்கம் - செம்பியன்பற்று வடக்கு)

1992ஆ ஆண்டு மட்டு வெல்லாவெளி - நாவலடிச் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

நிதி (— தியாகராசா - காரைதீவு - அம்பாறை)
அருட்சந்திரன் / யோசப் (வேலமுருகு மகேந்திரன் - களுதாவளை - மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

[சி/7351]


தமிழீழத்தின் புதிய அத்தியாயம்!

அழகிய வர்ணப் படங்களை காலாகாலத்திற்கு நிலைத்து நிற்க சிறந்த முறையில் சட்டமிட்டு அமைத்துக் கொடுக்கும் முன்னணி நிறுவனம்

## ★ படமாடம் ★

சகல விதமான ★ பூக்கண்ணாடி
★ சாதாரண கண்ணாடி
★ அலுமினிய இணைப்புக்கள்
★ சாமிப்படங்கள்


ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும், மற்றும் சகலவிதமான படங்களை சட்டமிட்டுப் பெற்றுக்கொள்ளவும் நாடவேண்டிய

ஒரே ஸ்தாபனம்

**படமாடம்** அர்ச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7358)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை பாறூக்
### (தனபாலன் ஸ்ரீதரன்)

யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி மாணவன்

தாயின் மடியில்: 02-01-1973 தாயக மண்ணில்: 05-09-1991

ஆண்டு இரண்டு போனதடா நீ மண்ணை விட்டின்று
நீண்டு செல்லும் எம் கனவை நனவாக்க நீ நினைத்தாய்
தொண்டு செய்யப் புலியாகி புவிமீதில் நீ உயர்ந்தாய்
தமிழ் மண்ணைக் காக்க நீ தளராமல் பணிசெய்தாய்
மணலாற்றில் சாதனையைப் படைத்துமே விட்டாயே
தினந் தினந் தேடியுன்னை அலைகின்றோம் நாமிங்கே
பூமாலை தான் சாத்தி வணங்குகின்றோம் கல்லறையில்
எம் முயிர் உள்ளவரை உன் நினைவு நீங்காது.

உன் நினைவால் வாடும்
சிறுப்பிட்டி தெற்கு. அப்பா அம்மா, சகோதரர்கள்
நீர்வேலி. (5828) உறவினர்கள், நண்பர்கள்.



## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி




## சித்த மருத்துவத் துறையின் அபிவிருத்திக்கு நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

சர்வதேச நிறுவனங்கள் மேற்கத்தேய அடிப்படையிலான மருத்துவ நிறுவனங்களுக்கு உதவி செய்வதுபோல் சித்த வைத்திய நிறுவனங்களுக்கு உதவ வேண்டும். உள்ளூராட்சி மன்றங்களின் சித்த மருத்துவ நிறுவனங்களுக்கு உதவும் வகையில் பிரதேச செயலாளரிடம் மூலதன அபிவிருத்தி நிதியைப் பெற நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்எனயாழ். இந்துக்கல்லூரிகுமாரசாமிமண்டபத்தில் நடந்த கருத்தரங்கில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

ஆகஸ்ட் 29,30-ஆம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ''சித்த மருத்துவம் மக்கள் மயப்படுத்தல்'' என்றபொருள் பற்றி நடந்த கருத்தரங்கில் இறுதி நாள் நிகழ்ச்சியில் மேற்படி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இறுதி நாள் நிகழ்ச்சிக்குப் பிரதேச உள்ளூராட்சி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா தலைமை தாங்கினார்.

அக் கருத்தரங்கில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மூலிகை வளர்ப்புப்பண்ணை ஒன்றை யாழ்.அரச அதிபரின் நிதி உதவியைப்பெற்று அமைத்தல், சித்த மருந்துகளை கூட்டுக்குளிகையில் அடைப்பதற்கு அதற்கான கூட்டுக்குளிகைளை அரச அதிபரின் உதவியுடன் தருவித்தல்.

உள்ளூராட்சி மருத்துவர்கள் தமது நோயாளர் மற்றும் நோய்கள் பற்றிய தகவல்களை யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு வழங்கி மேற்கொண்டு ஆய்வுகளை மேற்கொள்ள உதவுதல்.

தனியார் மருத்துவமும்சித்த மருத்துவமும் தமது பணியை சமுதாய மருத்துவமாகவும் மாற்றியமைக்க வழி வகை செய்தல், அத்துடன் உள்ளூராட்சி சித்த மருத்துவர்கள் கிராமிய மட்டத்தில் தொண்டர்களுக்குப் பயிற்சி கொடுத்துச் சேவையாற்றுதல்.

கைதடியில் உள்ள சித்தமருத்துவ பல்கலைக்கழகப்பிரிவில் உள்ளூராட்சி சித்த வைத்தியர்கள் பட்டப்பின்படிப்பு மேற்கொள்ளுதற்கான ஏற்பாடுகளைச்செய்தல்.

சித்தன்கேணியில் உள்ள 'கோபாம்' தயாரிக்கும் மருந்துகளில்உற்பத்தித்திகதி,காலாவதியாகும் திகதி, மற்றும் மருந்து உற்பத்தியில் பயன்படுத்தும் மருந்துக் கூறுகளின் தன்மை பற்றிய உறுதியுரையை வெளியிடுதல் இங்கு உற்பத்தி செய்யப்படும் மருந்துகளை உள்ளூராட்சி சித்த மருத்துவ நிறுவனங்கள் கொள்வனவு செய்தல், கிராமங்கள்தோறும் சித்தமருத்துவம் பற்றிய கருத்தரங்குகளை உள்ளூராட்சி மன்றங்கள் நடத்துதல.

மேற்படி தீர்மானங்களுடன், சித்தன்கேணி 'கோபாம்' மருந்துற்பத்தி நிலையத்துக்கு ஆலோசனை வழங்க மேலதிகமாக சித்தவைத்தியப் பல்கலைக்கழகப் பிரதிநிதி, சுதேச வைத்திய சங்கப் பிரதிநிதி, தனியார் வைத்திய பிரதிநிதி, கைதடி சித்த வைத்தியசாலைக்கு பொறுப்பதிகாரி ஆகியவர்களை நியமித்தல் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## உடுகம்பொல நியமனம் நாட்டுநிலையை காட்டுகிறது

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல துறைமுக அதிகார சபையின் உப- தலைவராக நியமனம் பெற்றிருப்பது இந்த நாட்டில் நீதி சீர்குலைந்து விட்டது என்பதையே காட்டுகிறது. இவ்வாறு லண்டன் ஒப்சேவர் பத்திரிகையின் செய்தியாளர் லூசியன் ராஜகருணநாயக்கா கடந்தவாரம் கொழும்பில் நடைபெற்ற ''சத்தியக் கடதாசி மோசடி'' என்ற கருத்தரங்கில் பேசும் போது தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்புசட்டத்தரணிகள் இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தனர்.

பாலிடி ஹன்டா வழக்கில் உச்சநீதிமன்றம் உடுகம்பொல மனித உரிமைகளை மீறினார் தான் தவறுதலான தகவலின் அடிப்படையில் இவ்வாறு நடந்து கொண்டதாகத் தெரிவித்தார். அரசு உடுகம்பொலவுக்கு மன்னிப்பு வழங்கி இப்போது துறைமுக அதிகார சபையின் உப-தலைவராக நியமித்துள்ளது என்றார் லூசியன் ராஜகருணநாயக்கா.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், நீதியின் யோக்கியதை வீழ்ச்சி அடைந்திருப்பதற்கு நான் சட்டத்தரணிகளையே குறைசொல்ல விரும்புகின்றேன். சட்டத்தரணிகள் சமூகத்தில் செல்வாக்கு உடையவர்கள் நீதியில் குறைகள் ஏற்படும் போது சட்டத்தரணிகள் போர்க் கோலம் கொண்டிருக்க வேண்டும். ஆனால் சட்டத்தரணிகள் அதனைச் செய்யத் தவறிவிட்டார்

# தமிழ் மக்கள் ஏற்கக் கூடிய அரசியல் தீர்வு காண வேண்டும்

-குமார் ரூபசிங்க

இனப் பிரச்சினைக்கான தீர்வுக்காக முன்வைக்கப்படும் யோசனை எதுவும் சிறுபான்மையின மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக இருக்கவேண்டும். அத்துடன் இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக எந்தவிதமான இராணுவ முன்னெடுப்புக்கள் இருந்தாலும் இது ஒரு அரசியல் பிரச்சினை. இதற்கு அரசியல் தீர்வே அவசியம் என்பதை சகல கட்சிகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணிப் பிரமுகரும், ஜனவேகய குழுவைச் சேர்ந்தவரும், சர்வதேச விழிப்புணர்வு அமைப்பின் பிரமுகருமான குமார் ரூபசிங்க தெரிவித்தார்.

இனப் பிரச்சினை தொடர்பாகவும் அதற்கான தீர்வு முயற்சிகளையிட்டும் பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில், சிறுபான்மையினரின் அடையாளம் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு பயமுறுத்தல் இருக்கக் கூடாது எனவும் தெரிவித்தார்.

அத்துடன் பாராளுமன்ற தெரிவுக் குழுவிலிருந்து தமிழ்க் கட்சிகள் வெளியேறிவிட்ட போதிலும் கூட இதனுடைய நடவடிக்கைகளின் பெறுபேறுகளை உலக சமுதாயம் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளது. இத்தெரிவுக்குழுவின்பெறுபேறுகளிலிருந்துசிங்கள சமூகம் எதனை வழங்குவதற்கு தயாராக உள்ளது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.


## கல்வித்திணைக்களம் முறைசாராக் கல்வி பயிற்சி 1993

பாடநெறி: ஆங்கில சுருக்கெழுத்து தட்டெழுத்து
பாடசாலை: யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை.
கல்வித்தகைமை: க. பொ. த. சாதாரணம் ஆங்கிலம் [திறமைச்சித்தி] உட்பட 6பாடங்களில் சித்தி.

மேற்படி பயிற்சி பெற விரும்புவோர் மேற்படி பாடசாலையில் விண்ணப்பப்படிவங்களை பெற்று 12-9-93க்கு முதல் பாடசாலை அதிபருக்கு அனுப்பி வைக்கவும். [நேரிலும் சமர்ப்பிக்கலாம்]

அதிபர்,
[5841]. யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை


## உற்சவம்

கொழும்புத்துறை மணலியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் ஐயனார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த வியாழக்கிழமை மாலை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் விசேட அபிஷேகம் பூசை ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெற்று வருகிறது. (24)


யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
கலாசாலை வீதி, திருநெல்வேலி, கோப்பாய்.

## வெற்றிடம்

பதவி :- பொதுமுகாமையாளர் 165 / 88 - 8
வேதனம் :- 1305 - 60 × 4 — 75 × 11 — 2370. இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

கல்வி மற்றும் தகைமைகள் :- (அ) கூ. ச ஊ 9ஆம் சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டப் பதவியில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூ. ச. ஊ. 10ஆம் சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டப் பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது

(ஆ) பட்டதாரி அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை / மேற்பார்வை மட்டப் பதவியில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது,

(இ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தர) சான்றிதழ் / க. பொ. த. (உயர்தர) சான்றிதழ் 3 பாடங்களுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

தமிழ் மண்ணைக் காக்க நீ தளராமல் பணிசெய்தாய்
மணலாற்றில் சாதனையைப் படைத்துமே விட்டாயே
தினந் தினந் தேடியுன்னை அலைகின்றோம் நாமிங்கே
பூமாலை தான் சாத்தி வணங்குகின்றோம் கல்லறையில்
எம் முயிர் உள்ளவரை உன் நினைவு நீங்காது.

உன் நினைவால் வாடும்
சிறுப்பிட்டி தெற்கு. அப்பா அம்மா, சகோதரர்கள்
நீர்வேலி. (5828) உறவினர்கள், நண்பர்கள்.

---

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## 2-ம் லெப். அருள்நங்கை

[மார்க்கண்டேசர் பிறேமலதா]

தாயின் மடியில் 19-12-1974 | தாயக மண்ணில் 05-09-1991

காலங்கள் சென்றாலும்
காவியமாகிய உன்னை
சாலவும் நினைந்து நினைந்து
சாம்பி அழுகின்றோம் அம்மா
தாயக மீட்புக்கு முன்னோடியாய்
தலைவனின் வழிநடந்து காட்டினாய்
பாயும் புலியென மாங்குளம் முதல்
ஆனையிறவு, மணலாறு வரை போராடினாய்
உன்னைத் தொடர்ந்து உன் சகோதரர் இருவரும்
இன்று கடற்புலிகளாய்த் திகழ்கின்றார்
மண்ணையும், கடலையும் காப்பர் என்ற உறுதி
மனதார இன்று கடற்கரும்புலிகள் காட்டி விட்டனர்
மெய் மறந்து நிற்கின்றோம் அம்மா
மெது மெதுவாய் ஈழம் வந்து சேரும்
பெய்யும் மழையினுள்ளும் உன்முகம்
பிரகாசமாய்ச் சிரிப்பதைக் காண்கின்றோம் அம்மா!

ஊறணி,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்,
நண்பர்கள்.

[5815]

---

# உடுகம்பொல நியமனம் நாட்டுநிலையை காட்டுகிறது

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாசா உடுகம்பொல துறைமுக அதிகார சபையின் உப- தலைவராக நியமனம் பெற்றிருப்பது இந்த நாட்டில் நீதி சீர்குலைந்து விட்டது என்பதையே காட்டுகிறது. இவ்வாறு லண்டன் ஒப்சேவர் பத்திரிகையின் செய்தியாளர் லூசியன் ராஜகருணநாயக்கா கடந்தவாரம் கொழும்பில் நடைபெற்ற "சத்தியக் கடதாசி மோசடி" என்ற கருத்தரங்கில் பேசும் போது தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்புசட்டத்தரணிகள் இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தனர்.

பாலிடி ஹன்டா வழக்கில் உச்சநீதிமன்றம் உடுகம்பொல மனித உரிமைகளை மீறினார் என்று குற்றவாளியாகக்கண்டு தீர்ப்பளித்த சொற்ப காலத்தில் உதவிச் சுப்ரின்டன் பதவியிலிருந்து உடுகம்பொல சுப்ரின்டன்டாகப் பதவி உயர்த்தப்பட்டார்.

இதற்குப் பின் பல வருடங்களுக்குப்பின்னர் உடுகம்பொல அரசைக் கடுமையாகச் சாடினார். சிறிது காலம் சென்று, தான் தவறுதலான தகவலின் அடிப்படையில் இவ்வாறு நடந்து கொண்டதாகத் தெரிவித்தார். அரசு உடுகம்பொலவுக்கு மன்னிப்பு வழங்கி இப்போது துறைமுக அதிகார சபையின் உப-தலைவராக நியமித்துள்ளது என்றார் லூசியன் ராஜகருணநாயக்கா.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், நீதியின் யோக்கியதை வீழ்ச்சி அடைந்திருப்பதற்கு நான் சட்டத்தரணிகளையே குறைசொல்ல விரும்புகின்றேன். சட்டத்தரணிகள் சமூகத்தில் செல்வாக்கு உடையவர்கள் நீதியின் குறைகள் ஏற்படும் போது சட்டத்தரணிகள் போர்க் கோலம் கொண்டிருக்க வேண்டும். ஆனால் சட்டத்தரணிகள் அதனைச் செய்யத் தவறிவிட்டார்கள்.

இத்தாலியில் ஊழலுக்கு எதிராக நீதித்துறை சார்ந்தவர்கள் போராடியதோடு பல எதிர்ப்புகளுக்கும் முகம் கொடுத்தனர். இறுதியில் அவர்கள்முயற்சியால் இத்தாலியில் ஒன்றுக்குமேற்பட்ட பிரதமர்கள் சிறை சென்றனர். இவ்வாறு அவர் மேலும்கூறினார்.

# குடியேற்ற தடைச் சட்டம் பிரான்ஸில் அமுல்

(கொழும்பு)

பிரான்ஸில் வெளிநாட்டவர் குடியேற்றத் தடைச்சட்டம் கடந்த மாதம் 31ஆம் திகதி முதல் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இச் சட்டத்தின்படி பிரான்ஸினுள் எவரும் இலகுவாக புக முடியாது. அத்துடன் பிரான்ஸ் பெண்களையோ, ஆண்களையோ பரஸ்பரம் விரும்பித் திருமணம் செய்வதும் தடைசெய்யப்படும். இதே வேளை அகதிகளாக அரசியல் தஞ்சம்கோரி வருபவர்கள் கடும் விசாரணைக்குட் படுத்தப்படுவர் எனவும், அதில் நியாயமான காரணங்களை உடையவர்கள் மட்டும் தற்காலிகமாக இருக்க அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# உலகப் போரில் போட்ட குண்டு தெற்கில் மீட்பு

(கொழும்பு)

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது உபயோகிக்கப்பட்டதாக கருதப்படும் 25 கிலோ நிறையுடைய குண்டு ஒன்றை அம்பாந்தோட்டை பொலிசார் மீட்டுள்ளனர். இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷ் படைகள் இப்பகுதியில் முகாமிட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

ஈயத்தினால் உருவான இந்த குண்டில் தெளிவற்ற சில எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. சில வருடங்களுக்கு முன் இப்பகுதியில் இரு குண்டுகளை பொதுமக்கள் கண்டெடுத்து அறியாத்தனமாக அதனை கழற்றி பார்க்க முற்பட்டபோது அது வெடித்ததில் மூவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது பொலிசாரால் மீட்கப்பட்ட இந்த குண்டு பரிசீலனைக்காக பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

## அஞ்சலிக் கூட்டம்

(முல்லைத்தீவு)

கிளாலியிலும், பருத்தித்துறைகடலிலும்சாதனைபுரிந்த நான்கு கரும்புலிகளினதும் நினைவாக கடந்த 31 ஆம் திகதி மாலைமுள்ளிவாய்க்கால் பாடசாலையில் அஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது. கடற்புலிகளின் பயிற்சிப்பள்ளி பொறுப்பாளர் வாஞ்சிநாதன் முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் வரதன் ஆகியோர் உரையாற்றினர். இரவு 8மணிக்கு பொக்கணை பாடசாலையிலும் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

---

(வ-து)

கலாசாலை வீதி, திருநெல்வேலி, கோப்பாய்.

# வெற்றிடம்

பதவி :- பொதுமுகாமையாளர் 165 / 88 - 8

வேதனம் :- 1305 - 60 × 4 — 75 × 11 — 2370. இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

கல்வி மற்றும் தகைமைகள் :- (அ) கூ. ச ஊ 9ஆம் சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டப் பதவியில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூ. ச. ஊ. 10ஆம் சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டப் பதவியில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது

(ஆ) பட்டதாரி அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை / மேற்பார்வை மட்டப் பதவியில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது.

(இ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தர) சான்றிதழ் / க. பொ. த. (உயர்தர) சான்றிதழ் 3 பாடங்களுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

பதவி :- கணக்காளர் 165 / 88 - 10

வேதனம் :- 1005 - 40 × 5 — 50 × 10 — 1705. இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமைகள் :- (அ) கூ. ச. ஊ. 11ஆம் சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் / கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் பற்றிய எழுதுவினைஞர் பதவி ஒன்றில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூ. ச. ஊ. 12ஆம் சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் / கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் பற்றிய எழுதுவினைஞர் பதவியொன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது

(ஆ) பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவன தகுதிச் சான்றிதழ் பரீட்சை அல்லது ஆகுசெலவு முகாமைக் கணக்காளர் நிறுவன தேர்ச்சிச் சித்திச் சட்டம் / அல்லது இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி கணக்கியல் டிப்புளோமா அல்லது சமமான தகைமைகளுடன அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்காளர் / உள்ளகக் கணக்குப் பரிசோதனைப் பதவி ஒன்றில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

பதவி :- பால்நிலைய முகாமையாளர் 165 / 88 - 12

வேதனம் :- 855 - 30 × 7 — 40 × 8 — 1385. இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

கல்வித் தகைமை :- (அ) கூ. ச ஊ, 13ஆம் சம்பளத் திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்டப் பதவி ஒன்றில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூ. ச. ஊ 14ஆம் சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்டப் பதவி ஒன்றில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது

:- (ஆ) கூட்டுறவுப் பணியாளர் [உயர்தர] சான்றிதழ் / க. பொ. த. (உயர்தர) சான்றிதழ் மூன்று பாடங்களுடன் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பால் தொடர்பான தொழில்நுட்ப அறிவுடன் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

பொது

வயது எல்லை :- வயது 23க்கும் 50க்கும் உட்பட்டதாக இருக்க வேண்டும். (தற்போது கூட்டுறவு ஊழியராக இருப்போருக்கு இந்த நியதி செல்லுபடியாகாது.)

வசிப்பிடத்தகைமை :- குறைந்தபட்சம் 2 வருடங்களாவது யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்,

பிணைப்பணம் :- கூ. வே. ஆணைக்குழுச் சட்டத்திற்கமைவாகச் சங்கம் தீர்மானிக்கும் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

உள்ளடக்கப்பட வேண்டியவை :- கல்வி, பிறப்பு. நற்சான்றுப் பத்திரங்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்பப் பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதி: 20-09-93**

விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் மேற்சொல்லப்பட்ட விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மூலையில் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(சி-7353)

தலைவர்

# தமிழ்ப்பரிதி நகைமாடம்

## மூன்றாம் ஆண்டின் உதயம்

## தென்மராட்சி நகைப் பிரியர்களுக்கு

சாவகச்சேரியில் ஓர் வரப்பிரசாதம்

எமது வாடிக்கையாளர்
அன்பர்கள்
ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது
நன்றிகள்
நல்லாசிகள்
உரித்தாகுக!

வளரும் ஆண்டில்
உங்கள்
நகைத்தேவைகளை
பூர்த்தி செய்யக்
காத்திருக்கிறோம்

## தமிழ்ப்பரிதி நகைமாடம்

15, நவீன சந்தை, சாவகச்சேரி.

சகோதர நிறுவனங்கள்

சேவையில் சிறந்து விளங்க எம்

நல்வாழ்த்துக்கள்

யாழ். நகரிலிருந்து...

யாழ். நகரிலிருந்து...

நல்லாசிகள் வழங்கும்

சகோதர நிறுவனங்கள்

# தமிழ்ப்பாதி நகைமாடம்

**15, நவீன சந்தை, சாவகச்சேரி.**

சகோதர நிறுவனங்கள்

சேவையில் சிறந்து விளங்க எம்

**நல்வாழ்த்துக்கள்**

யாழ். நகரிலிருந்து...

## அழகுநிலா நகைமாடம்

## தமிழ்நிலா நகைமாடம்

கிளிநொச்சியிலிருந்து...

**நேசக்கரம் நீட்டும்**

## தமிழரசி நகைமாடம்

யாழ். நகரிலிருந்து...

**நல்லாசிகள் வழங்கும்**

சகோதர நிறுவனங்கள்

## வான்மதி நகைமாடம்

## தமிழ்மதி நகைமாடம்

(ஞ-73501)

சிந்தனைக்கு

அபாயங்கள் அச்சத்தை மூட்டுகின்றன.
அச்சங்கள் மேலும் அபாயங்களைக் கூட்டுகின்றது.
- ரிச்சர்ட் பேக்ஸ்டர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05-09-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2026
த. பெ. எண்-05

## படுகொலைக்கு சட்டபூர்வ அங்கீகாரம்

“அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்” என்பது போன்று உள்ளது சிறிலங்கா அரசாங்கத்தினதும், அதன் கடற்படையின் நடவடிக்கையும் ஆகும். இன்று கடற்புலிகளின் நடவடிக்கைகளுக்கு அஞ்சி சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கையே இவ்வாறு கூறத் தூண்டுகின்றது.

வடகடற்கரை ஓரப் பகுதி எங்கும் தடைசெய்யப்பட்ட பிராந்தியமாக சிறிலங்கா அரசாங்கம் செய்துள்ள பிரகடனமானது மேற்சொன்ன நடவடிக்கைகளில் ஒன்றே ஆகும். இவ் அறிவித்தலின்படி அதிகாரிகளின் அனுமதி இன்றி எந்தக் கப்பலும், படகும் இப்பிராந்தியத்தில் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டமானது, முன்னரே தமிழர் பிரதேசத்தில் முடங்கிப் போயுள்ள மீன்பிடித் தொழிலை முற்றாகத் தடை செய்வதோடு, தமிழ்மக்கள் மீதான பொருளாதாரத் தடையையும் தீவிரமாக்கும் ஓர் அம்சமாகவே இருக்கும். இதனால் முன்னைய தடை நடவடிக்கைகளினால் ஆழ்கடல் மீன்பிடியைக்கைவிட்டு இன்று சிலபகுதிகளில், மிகவும் கரையை அண்டிய பகுதிகளில் சிறிய அளவில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களும் பெருமளவில் பாதிக்கப்படவுள்ளனர். அவர்களின் நாளாந்த சீவியமே கேள்விக்குரியதாகிவிடும் என்பதில் சந்தேகம் இல்லை

மேலும், இச்சட்டமானது இந்திய மீனவர்களைப் பொறுத்தும் இன்று சிறிலங்கா கடற்படைக்கு அவசியமாகியுள்ளது. வடகடற் பிராந்தியத்தில் கடற்புலிகளின் நடமாட்டத்தையும், கடற்புலிகள் தாக்குதல்களையும் கண்டு அஞ்சும் சிறிலங்கா கடற்படையானது, வடகடல் பிராந்தியத்திற்குள் பிரவேசிக்கும் இந்திய - தமிழக மீன்பிடிப் படகுகளை கண்டும் கடற்புலிகளோ என அச்சமுறும் ஒருகட்டத்தை அடைந்துள்ளது. இதன் வெளிப்பாட்டில் ஒன்றே மூன்று தினங்களின் முன் தமிழக மீன்பிடிப் படகு சிறிலங்காக் கடற்படையால் மூழ்கடிக்கப்

# தமிழகத்தில் பராமரிப் பற்றநிலையில் இலங்கைத் தமிழ் அகதி மக்கள்

**1990**ம் ஆண்டின் ஜூலை மாதத்தின் பின்னர் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், திருக்கோணமலை மாவட்டங்களிலிருந்து சுமார் ஒன்றரை லட்சம் தமிழ் மக்கள் தமது வீடு வாசல்களையும், உடைமைகளையும் இழந்து உயிர் தப்பினால் போதும் என்ற நிலையில் இயந்திரப் படகுகளிலும், வள்ளங்களிலுமாக தமிழ் நாட்டிற்கு அகதிகளாகச் சென்றனர்.

இந்த அகதிகள் அங்கு படகுகளில் இருந்து கரையில் இறங்கிய சமயம் தமிழ்நாடு அரசாங்கம் பஸ்வண்டிகளில் ஏற்றிச் சென்று தமிழ்நாட்டின் பதினைந்து மாவட்டங்களில் 185 முகாம்களில் குடியமர்த்தியது.

இவர்களுக்கு சமையல் பாத்திரங்கள் உடுதுணிகள், படுப்பதற்கான பாய் முதலானவை கள் வழங்கப்பட்டன. உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன. சுகாதார, மருத்துவ வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

அன்றும்
இன்றும்

ஆரம்பத்தில் குடும்பத் தலைவருக்கு, மாதம் ஒன்றுக்கு 150 ரூபாவும், மனைவிக்கு 120 ரூபாவும், பிள்ளைகளுக்கு ஒரு பிள்ளைக்கு 60 ரூபா என்ற வீதத்திலும் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

இதைவிட மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்பத்திற்கு 12 கிலோ அரிசி கிலோ 55 சதவீதமும், பத்து லீற்றர் மண்ணெய் லீற்றர் 3 ரூபா வீதமும், சீனி ஒரு கிலோ 8 ரூபா வீதமும் வழங்கப்பட்டது அத்துடன் இரண்டு கிலோ மாவும் வழங்கப்பட்டது.

1990-ம்ஆண்டின் வாழ்க்கைச் செலவினத்திற்கே இந்த உதவிகள் பெரும்பாலும் மட்டுமட்டாக இருந்தது. அந்த நேரத்தில் பல அரச சார்பற்ற நிறுவனங்களும், பணம் படைத்த பலரும் சில சினிமா நடிகர்களும் இடையிடையே உணவுப் பொருள்களையும், உடுதுணிகளையும் இலவசமாக வழங்கி வந்தனர்.

ஆனால் 1991-ம் ஆண்டின் பின்னர் தமிழ்நாட்டில் அகதிகளை பராமரிக்கும் முறையில் மாற்றம் ஏற்பட்டது. அகதிகளை வேண்டா வெறுப்புடன் கவனிக்கும் நிலை ஏற்படலாயிற்று.

தற்போது தமிழ்நாட்டில் அரச சார்பற்ற நிறுவனங்கள் அகதிகளுக்கு உதவி செய்வதில்லை. சமையல் பாத்திரங்கள், படுப்பதற்கான பாய் போன்றவை அரசினால் வழங்கப்படுவதில்லை.

சமையல் செய்வதற்காக முன்னர் அரசாங்கம் கட்டிக் கொடுத்த கொட்டில்களைக் கூட அரசாங்கம் வேய்ந்து கொடுக்காததால் அகதிகள் தமது சொந்தச் செலவில் இக்கொட்டில்களை வேய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு குடம் தண்ணீருடன்.
ஒரு நாள் வாழ்க்கை

தமிழ்நாட்டில் அகதி முகாம்களில் தற்பொழுது ஒரு குடும்பத்திற்கு நாள் ஒன்றுக்கு ஒரு குடம் தண்ணீர் மட்டுமே கொடுக்கப்படுகிறது. இந்த ஒரு குடம் தண்ணீரைக் கொண்டே சமையல் வேலைகளையும் குடிநீர் பாவனையையும் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. அகதி மக்கள் குளிப்பதற்கும் கூட அயல் கிராமங்களிலுள்ள கிணறுகளையே நாடிச்செல்ல வேண்டியுள்ளது.

கல்வி கற்கும் சிறுவர்களுக்கு புத்தகம், பயிற்சிக் கொப்பிகள் முதலானவைகள் முன்பு இலவசமாக வழங்கப்பட்டு வந்தன. ஆனால் இப்போது இவ் விநியோகங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் அகதி மாணவர்களின் கல்வியில் வெகுவான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

முகாம்களில் அகதிகளின் பாவனைக்காக மல சல கூட வசதிகள் போதியளவு இல்லாமையாலும், உள்ளவற்றை நன்கு கவனியாதமையாலும் முகாம்களில் தொற்று நோய்கள் பரவி வருவதால் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அகதிகளுக்கு மருத்துவ வசதிகள் எதுவுமில்லை. இதன் காரணமாக பல நோயாளர்கள் இறந்துள்ளனர். பாரிய நோயினால் பீடிக்கப்பட்டவர்களை வசதியுள்ள பெரிய வைத்தியசாலைகளுக்கு கொண்டுசெல்வதற்கான வசதிகள் கூட எதுவுமில்லை.

முகாம்களில் இறப்பவர்களின் பிரேத அடக்கச் செலவிற்காக நூறுரூபா மட்டுமே வழங்கப்படுகிறது. இப்பணத்தொகை பிரேத அடக்கச் செலவிற்குப் போதுமானதாக இல்லை என்பதால் இதனைச் சிலர் பெறுவதில்லை.

அரச சார்பற்ற நிறுவனங்கள் அகதிகளுக்கு உதவி வழங்கும் விடயத்தில் மத்திய அரசு கட்டுப்பாடுகளை விதித்துள்ளமையால் உதவி வழங்கி வந்த பல அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்ந்து உதவிகளை வழங்க முடியாத நிலைக்கு உள்ளாகியுள்ளன.

முகாம்களில் உள்ளவர்கள் வெளியிடங்களுக்கு சென்று கூலித் தொழில் செய்து வருவாயைப் பெற்ற வழிமுறைகளுக்கும் இப்போது தடை விதிக்கப்பட்டுள்ளது. முகாம்களை விட்டு வெளியேறுவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு அவை கடுமையாக அமுலாக்கப்படுவதால் அகதிகள் கூலித்தொழிலுக்கு செல்ல முடியாத நிலைக்கு உள்ளாகியுள்ளனர் இதனால் வழங்கப்படும் நிவாரணங்களிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலையும், அவையும் கால் வயிற்று உணவுக்கே போதாத நிலையும் இருப்பதால் பலர் சில நாட்கள் பட்டினி கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமைகளால் ‘‘பட்டினியாய் கிடந்தாலும் நிம்மதியாக தமிழ் நாட்டில் கிடக்கலாம்’’ என்ற நிலையில் சிலரும், ‘‘பட்டினி கிடந்து சாவதைவிட செத்தாலும் எமது தாய்நாட்டுக்குசென்று சாவதுமேல்’’ என்ற நிலையில் சிலருமாக அகதிகள் மத்தியில் இரண்டு சிந்தனைகள் காணப்படுகின்றன.

இன்னும் சுமார் எண்பதினாயிரம் அகதிகள் 135 முகாம்களில் தமிழ்நாட்டில் உள்ளனர். இவர்களில் ஏழாயிரம் பேர் மட்டுமே மீண்டும் வர சம்மதம் தெரிவித்துள்ளனர்

ஆனால் ஏனைய அகதிகளின் இன்றைய அவல நிலையைப் பற்றி தமிழக அரசோ, மத்திய அரசோ எவ்வித அக்கறையும் காட்டாதநிலையே இன்னமும் தொடர்கதையாக உள்ளது.

## பிளவு உயர்மட்டத்தில் தான் மக்கள் மட்டத்தில் இல்லை

றிச்சர்ட் பத்திரான

(கொழும்பு)

கட்சியின் உயர்மட்டத்தில் பிளவு இருக்கிறது. கட்சியின் ஆதரவாளர்களான மக்கள் மட்டத்தில் எத்தகைய பிளவும் இல்லை இவ்வாறு காலி மாவட்ட சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான றிச்சர்ட் பத்திரான கூறியுள்ளார்.

ஹபராதுவ சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், சுதந்திரக் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் மக்களுக்கு தலைமைத்துவத்தை வழங்கி மேற்சொன்னப்பட வேண்டும். இன்று சுதந்திரக் கட்சிக்குள் மட்டுமன்றி ஐ தே. கவிலும் ஐ.ஐ தே முவிலும் கூட பிரச்சினைகள் உள்ளன.

குருமார், வைத்தியர், ஆசிரியர், விவசாயி, தொழிலாளர், ஆகிய ஐம் பெரும் சக்திகளின் நலன்களை நாடியே பண்டாரநாயக்க அன்று கட்சியை ஆரம்பித்தார் ஐ தே. கவுக்கு பதிலாக மற்றுமொரு ஐ தே. கவை உருவாக்க அவர் முற்படவில்லை என்றும் தெரிவித்தார்.

## நீதி, நியாயத்திற்கும் ஜனநாயகத்திற்கும் வெற்றி

அநுரா தெரிவிப்பு

(கொழும்பு)

## தி.மு.கவை பிளக்க முனைவோருக்கு ஆப்பு அசைத்த குரங்கின் கதி

-கருணாநிதி எச்சரிக்கை

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பிளவுபடுத்த எத்தனிப்போர் ஆப்பு அசைத்த குரங்கின் கதிக்கு இலக்காவார்கள் என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

திருச்சியை அடுத்துள்ள லால்குடிப் பகுதியில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் நான் தஞ்சை மாவட்டத்தை சேர்ந்தவன் என்றாலும் எனது அரசியல் வாழ்வில் எனக்கு தோன்றாத் துணையாக இருப்

புகாரை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. நீங்களும் காங்கிரஸ்காரர் கூறிய குற்றச்சாட்டை நம்பினீர்கள். நாங்கள் சொன்னதை ஏற்க மறுத்தீர்கள். இப்போது ராஜீவ் கொலை வழக்கு விசாரணையில் 40 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டு உள்ளது. இவர்களில் ஒருவராவது தி. மு. கவைச் சேர்ந்தவரா? இல்லை. ராஜீவைக் காப்பாற்றத் தவறியது காங்கிரஸ்கட்சி. அன்று ஆட்சியில் இருந்த கவர்னர் திருவாசகம் என்று வர்மா கமிஷன் கூறுகிறது.

பெற்று தி மு.க. வளர்வது கண்டு பொறுக்கமுடியாதவர்கள் தி. மு. கவை எனது குடும்பக் கட்சி என்று கூறிப் பிளவை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். ஆமாம், லட்சக்கணக்கான தொண்டர்களைக் கொண்ட தி. மு.க. ஒரு குடும்பக் கட்சிதான். நாமெல்லாம் தி மு.க. என்ற குடும்பத்தை சேர்ந்தவர்கள்தான் நமக்குள் பிளவை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். அது நடக்காது. பிளவை ஏற்படுத்த முயற்சிக்கும் மாற்றாருக்கு ஆப்பை பிடித்த குரங்கின் கதிதான்

கவே இருக்கும். இதனால் முன்னைய கட்டுப்பா டுக்களினால் ஆழ்கடல் மீன்பிடியைக்கைவிட்டு இன்று சிலபகுதிகளில், மிகவும் கரையை அண்டிய பகுதிகளில் சிறிய அளவில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களும் பெருமளவில் பாதிக்கப்பட வுள்ளனர். அவர்களின் நாளாந்த சீவியமே கேள்விக்குரியதாகிவிடும் என்பதில் சந்தேகம் இல்லை

மேலும், இச்சட்டமானது இந்திய மீனவர்களைப் பொறுத்தும் இன்று சிறிலங்கா கடற்படைக்கு அவசியமாகியுள்ளது. வடகடற் பிராந்தியத்தில் கடற்புலிகளின் நடமாட்டத்தையும், கரும்புலிகள் தாக்குதல்களையும் கண்டு அஞ்சும் சிறிலங்கா கடற்படையானது, வடகடல் பிராந்தியத்திற்குள் பிரவேசிக்கும் இந்திய – தமிழக மீன்பிடிப் படகுகளை கண்டும் கடற்புலிகளோ என அச்சமுறும் ஒரு கட்டத்தை அடைந்துள்ளது. இதன் வெளிப்பாட்டில் ஒன்றே மூன்று தினங்களின் முன் தமிழக மீன்பிடிப் படகு சிறிலங்காக் கடற்படையால் மூழ்கடிக்கப்பட்ட சம்பவமாகும். அதாவது வடகடற்பரப்பில் காணப்படும் எந்தப்படகும், தம்மை நெருங்கவிடாது மூழ்கடிக்கும் ஓர் அபாயமான நிலைப்பாட்டைச் சிறிலங்கா கடற்படை எடுத்துள்ளது

இதேவேளை, வடபகுதிக் கடற்பிராந்தியம் தடைசெய்யப்படுவது புதியதொன்றல்ல. இது முன்னரும் தடை செய்யப்பட்ட ஒரு பகுதிதான். பாதுகாப்பு வலயம் என்றும், கரையோரப் பாதுகாப்பு எனவும் 1984 ஆம் ஆண்டிலிருந்தே வடபகுதிக் கடல் மீது அரசாங்கம் தடைகளை விதித்து வந்துள்ளது. அதேபோன்று, யாழ் கடல் நீரேரியும் சிறிலங்கா அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட பகுதியாகவே சுமார் ஒருவருட காலம் அளவில் இருந்து வருகின்றது.

ஆகையினால், தற்போதைய அறிவிப்பானது கடலில் நடமாடுவதற்கான உரிமையை புதிதாக மறுக்கின்றதொன்றல்ல. ஆனால் கடற்பரப்பில் எவரையும் கண்டவுடன் கொல்வதற்கான அனுமதியை சிறிலங்கா கடற்படைக்கு வழங்கும் நோக்கம் கொண்டதாகும்.

அதாவது, கடற்படை ஏற்கனவே அனுபவித்துவந்த உரிமைக்கு ஒரு சட்ட பூர்வமான அங்கீகாரம் கொடுப்பதே அதன் நோக்கமாகும். தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாகக் கூர்மையடைந்த நாளில் இருந்தே சிறிலங்காக் கடற்படை பல மீன்பிடிப் படகுகளை மூழ்கடித்துள்ளது. பலரைச் சுட்டுக் கொன்றுள்ளது. பெரும் எண்ணிக்கையில் கைது செய்து சித்திரவதை செய்துள்ளது. மீன்பிடி உபகரணங்களை அபகரித்தும், அழித்தும் உள்ளது.

இந்நிலையில், தற்போதைய புதிய தடைச் சட்டமானது புதிதாக எதையும் சிறிலங்கா கடற்படைக்கு வழங்குமானால் அது, கடற்பரப்பில் காணப்படும் எவரையும் தூரத்தில் வைத்தே கொன்று விடுவதற்கும், அவர்களின் படகை மூழ்கடித்து விடுவதற்குமான அனுமதியே ஆகும். அதாவது, கடற்பரப்பில் படுகொலை புரிவதற்கான அங்கீகாரமாகும் கடந்த ஒரு வருட காலமாகக் கிளாலிக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படை மேற்கொண்டுவரும் கொலைகள் போன்றவற்றிற்கு வழங்கப்படும் முழுமையான, சட்டபூர்வ அங்கீகாரமாகும்.

(கொழும்பு)

கட்சியின் உயர்மட்டத்தில் பிளவு இருக்கிறது. கட்சியின் ஆதரவாளர்களான மக்களின் மட்டத்தில் எத்தகைய பிளவும் இல்லை இவ்வாறு காலி மாவட்ட சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான றிச்சர்ட் பத்திரான கூறியுள்ளார்.

ஹபராதுவ சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், சுதந்திரக் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் மக்களுக்கு தலைமைத்துவத்தை வழங்கி மேற்கொள்ளப்பட வேண்டும். இன்று சுதந்திரக் கட்சிக்குள் மட்டுமன்றி ஐ. தே. கவிலும் ஜ.ஐ.தே.முவிலும் கூட பிரச்சினைகள் உள்ளன.

குருமார், வைத்தியர், ஆசிரியர், விவசாயி, தொழிலாளர், ஆகிய ஐம்பெரும் சக்திகளின் நலன்களை நாடியே பண்டாரநாயக்க அன்று கட்சியை ஆரம்பித்தார் ஐ. தே. கவுக்கு பதிலாக மற்றுமொரு ஐ. தே. கவை உருவாக்க அவர் முற்படவில்லை என்றும் தெரிவித்தார்.

## நீதி, நியாயத்திற்கும் ஜனநாயகத்திற்கும் வெற்றி

### அநுரா தெரிவிப்பு

(கொழும்பு)

திலக் கருணாரத்ன பெற்ற வெற்றியானது நீதிக்கும், நியாயத்திற்கும், ஜனநாயகத்திற்கும் இடைத்த வெற்றியாகும் என்று அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டமைக்கு எதிராக திலக் கருணாரத்னா தாக்கல் செய்த மனுவின் மீது உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தமை தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அநுரா மேலும் தெரிவிக்கையில்.

உயர்நீதி மன்றத்தின் இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் ஒரு சில தனிநபர்களைத் தெரிவு செய்து பலியாக்குவதும் துன்புறுத்துவதும் நிறுத்தப்பட வேண்டும். கட்சி ஒழுங்கின் ஒவ்வொரு விதிமுறையையும் மீறுவதற்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ள-கையாட்களையும் 'ஆமாம்' போடுபவர்களையும் பாதுகாப்பதற்கான யுத்தித்தையும், இது முடிவுக்குக் கொண்டு வரும்.

துணிவுடனும், வீரத்துடனும், உண்மையைப் பேசுபவர்கள் மீது மட்டுமே ஒழுங்கு நடவடிக்கை பிரயோகிக்கப்படுகின்றது. சகல தவறுகளுக்கும் தமது தலைகளைச் சாய்த்து 'ஆமாம்' போடும் ஒரு சிலர் பாதுகாத்து போஷிக்கப்படுவதுடன் ஊக்குவிக்கவும் படுகின்றனர். நீண்ட காலமாக இந்த மாபெரும் கட்சியைப் பீடித்துள்ள ஒரு தொற்று நோயாக இது உள்ளது.

கட்சி ஜனநாயக மயப்படுத்தப்பட வேண்டும் என்பதை இந்த தீர்ப்பு எமக்கு எடுத்துக் காட்டுகிறது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## அண்டைய நாட்டுடன் நட்புறவு வேண்டும்

### தேரோ கருத்து

[கொழும்பு]

அண்டைய நாடுகளுடன் சிறந்த நட்புறவை வளர்த்துக் கொண்டு அவர்களின் வெளிநாட்டுக் கொள்கைக்கு ஏற்ப நடந்து கொண்டால் எமது நாட்டின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும். இவ்வாறு வண. மெட்டிலியே பன்னாசித்தி தேரர் தெரிவித்தார்.

சிறி சரணாந்த அபிவிருத்தி மன்றத் தலைவரான அவர் எக்பிட்டியா பிரதேசத்திலுள்ள நான்கு கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வறுமை ஒழிப்புத் திட்டங்கள் தொடர்பாக நடத்தப்பட்ட கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில், இலங்கையில் சுமார் இருபது சதவீதமானவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர் எனவும் தெரிவித்தார்.

## நிர்வாக கூட்டம்

கொழும்புத்துறை (துண்டி) இந்து மயான புதிய நிர்வாக சபையின் கூட்டம் இன்று பிற்பகல் 2மணிக்கு கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

## 23-வது ஆண்டு நிறைவு விழா

கொழும்புத்துறை மேற்கு சனசமூகநிலையத்தின் 23-வது ஆண்டு நிறைவு விழா இன்று 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 00 மணிக்கு நிலையத் தலைவர் திரு. ப. கண்ணதாசன் தலைமையில் இடம் பெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலாளர் கலாநிதி க. குணராசாவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (24)

# ஆப்பு அசைத்த குரங்கின் கதி

## -கருணாநிதி எச்சரிக்கை

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பிளவுபடுத்த எத்தனிப்போர் ஆப்பு அசைத்த குரங்கின் கதிக்கு இலக்காவார்கள் என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

திருச்சியை அடுத்துள்ள லால்குடிப் பகுதியில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் நான் தஞ்சை மாவட்டத்தை சேர்ந்தவன் என்றாலும் எனது அரசியல் வாழ்வில் எனக்கு தோன்றாத் துணையாக இருப்பது திருச்சி மாவட்டம்தான். தேர்தலில் போட்டியிட நான் முடிவுசெய்த போது அண்ணாவினால் எனக்கு ஒதுக்கப்பட்ட இடம் குளித்தலை தொகுதி. கல்லடி போராட்டத்தில் ஆறுமாதமும், விலைவாசி எதிர்ப்பு போராட்டத்தில் மூன்று மாதமும் நான் சிறைத்தண்டனை அனுபவித்ததும் இதே திருச்சியில் தான்.

தி மு.க. இந்த நாட்டுக்காக எவ்வளவோ தியாகங்களைச் செய்துள்ளது. அதை இந்த நாட்டு மக்கள் உணரத் தவறியதால் இன்று நாடு சோக பூமியாக காட்சி தருகிறது.

இவர்கள் எப்படி ஆட்சிக்கு வந்தார்கள்? காங்கிரஸ் கட்சிக்கும், அதன் கூட்டணிக்கும் தேர்தல் பிரசாரம் செய்ய ராஜீவ் வந்தார். போதிய பாதுகாப்பு இல்லாத நிலையில் அவர் கொலையுண்டார். உடனேயே காங்கிரஸ் கட்சியினர், வி. பி. சிங் கையில் ஒரு துப்பாக்கி என் கையில் ஒரு துப்பாக்கி-இங்குள்ள தி மு.கவினர் ஒவ்வொருவர் கையிலும் துப்பாக்கி - கொண்டதாக போஸ்டர் ஒட்டி நாங்கள் தான் ராஜீவைக் கொன்றதாக பிரசாரம் செய்தார்கள்.

இன்று சட்டம், ஒழுங்கு கெட்டு விட்டதாக காரணம் காட்டி தேர்தலை ஒத்தி வைத்த சேஷனிடம் அன்று புகார் செய்தோம். எங்கள் புகாரை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. நீங்களும் காங்கிரஸ்காரர் கூறிய குற்றச்சாட்டை நம்பினீர்கள். நாங்கள் சொன்னதை ஏற்க மறுத்தீர்கள். இப்போது ராஜீவ் கொலை வழக்கு விசாரணையில் 40 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டு உள்ளது. இவர்களில் ஒருவராவது தி. மு. கவைச் சேர்ந்தவரா? இல்லை. ராஜீவைக் காப்பாற்றத் தவறியது காங்கிரஸ்கட்சி. அன்று ஆட்சியில் இருந்த கவர்னர் நிருவாகம் என்று வர்மா கமிஷன் கூறுகிறது.

மக்களின் ஆதரவைப் பெற்று தி மு.க. வளர்வது கண்டு பொறுக்கமுடியாதவர்கள் தி. மு. கவை எனது குடும்பக் கட்சி என்று கூறிப் பிளவை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். ஆமாம், லட்சக்கணக்கான தொண்டர்களைக் கொண்ட தி. மு. க. ஒரு குடும்பக் கட்சிதான். நாமெல்லாம் தி மு.க. என்ற குடும்பத்தை சேர்ந்தவர்கள்தான் நமக்குள் பிளவை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். அது நடக்காது. பிளவை ஏற்படுத்த முயற்சிக்கும் மாற்றாருக்கு ஆப்பை பிடித்த குரங்கின் கதிதான் ஏற்படும்என்றும்தெரிவித்தார்

## சரத் பவார் இராஜினாமா

[டில்லி]

இந்திய பாராளுமன்றத்தின் மக்களவையான லோக்சபாவின் உறுப்பினர் பதவியை மகாராஷ்டிரா மாநில முதல்வர் சரத்பவார் இராஜினாமா செய்துள்ளார். மகாராஷ்டிரா மாநில சட்டமன்ற மேலசபையின் உறுப்பினராகத்தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர் இப்பதவியை துறக்க முடிவு செய்தார் என்று கூறப்படுகிறது.

## இந்தியாவைப் பற்றிய எண்ணம் இப்போது மாறி வருகிறது

### பிரதமர் ரணில்

(டில்லி)

இந்தியாவைப் பற்றி எமது மக்கள் மத்தியில் இருந்த தப்பான எண்ணங்கள் தற்போது மாறி வருகின்றன. இந்திய முதலீட்டாளர்கள் பலர் தற்போது இங்கு முதலிட முன்வந்திருப்பது மூலம் இவ் இரு நாடுகளுக்கும் இடையில் நல்லுறவுகள் மேலும் மேலும்வலுப்பட்டுள்ளன என சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அண்மையில் களுத்துறையில் இலங்கை அசோசியேட்டட் மோட்டர் வேக்ஸ் (ஏ. எம் டபிள்யூ) நிறுவனமும் இந்தியாவிலுள்ள சியேர்ஸ் நிறுவனமும் ஒன்றிணைந்து ஆரம்பித்துள்ள ரயர் உற்பத்தி தொழிற்சாலையை அங்குரார்ப்பணம் செய்த பின் உரையாற்றிய பிரதமர் மேலும் கூறுகையில்,

ஒரு காலகட்டத்தில் இந்தியா சம்பந்தமாக நமது நாட்டில் உள்ள பலர் பல தவறான கருத்துக்களை வெளியிட்டு வந்தனர். ஆனால் இப்போது இந்தியதனியார் துறையினரும் இலங்கை தனியார் துறையினரும் ஒன்றிணைந்து பாரிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது வரவேற்கத்தக்கது ஆகும் என்றும் குறிப்பிட்டார்.

## இஸ்ரேலுடன் உடன்பாடு பற்றி பாலஸ்தீனியர்களினுள் முரண்பாடு

[ரியூனிஸ்]

பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத்தை அவரது பத்தா இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் பன்னிரண்டு பேர் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இவர்களில் நான்கு பேர் இஸ்ரேலுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ளுவதற்கு எதிர்ப்பு அல்லது சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான பத்தா இயக்கத்தின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் வரை தொடர்ந்து நீடித்த போதும் இணக்கம் எதுவும் காணப்படாமலேயே முடிவுக்கு வந்தது மீண்டும் ஒருசுற்றுப் பேச்சுவார்த்தை நடக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை ஜோர்தானின் மேற்குக் கரையில் இருந்தும் காஸாவில் இருந்தும் தப்பியோடிய எட்டு லட்சத்திற்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் மீண்டும் திரும்ப அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று இஸ்ரேலியபிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்த எட்டு லட்சம் பேரும் நாடு திரும்புவதை உடன்படிக்கை உறுதி செய்யும் என்றுபாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

**மரம் நடுதல் மாபெரும் பணி**

ஈழநாதம்

# இஸ்ரேல் - பாலஸ்தீன உடன்பாடு சிக்கல்நிலையில்

[டெல்அவிவ்]

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பிரதான உறுப்பான சதாவ் அடுத்த வாரம் வாஷிங்டனில் இஸ்ரேலுக்கும் பி.எல்.ஓவுக்கும் இடையில் கைச்சாத்தாக இருக்கும் உத்தேச ஒப்பந்தத்திற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தியுனிஸ்சில் மூன்று நாள்களாக நடைபெற்ற ஆலோசனையின் பிறகு சதாவ்வின் மத்திய குழு பி. எல் ஓ. தலைவர் யாஸார்அரபாத்துக்கு ஒப்புதல் அளித்தது இதேவேளை சுயாட்சிக்கான திட்டத்தை அடுத்து சமாஜ் மற்றும் தீவிரவாதக் குழுக்கள் அரபாத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது அதிகரித்து வருகிறது.

இதேவேளை இஸ்ரேல்-பாலஸ்தீன சமரச உடன்பாட்டிற்கு இஸ்ரேல் வசமுள்ள பகுதிகளில் தீவிர எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. சிலபாலஸ்தீன தீவிரவாதக் குழுக்கள் இதற்கெதிராக பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். இவர்கள் மீது பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பிரதான குழுவினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். பாலஸ்தீன அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்தவுள்ளதாக அங்குவாழும் யூதர்களும் அச்சுறுத்தியுள்ளனர் இஸ்ரேல் வசமுள்ள பகுதியிலுள்ள அகதி முகாம்களிலும் தீவிர ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுறன.

பாலஸ்தீனியருக்கு பாலஸ்தீன விடுதலை இயக்கம் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டதாக இவர்கள் குற்றஞ்சாட்டினர்.

## ஐப்பானில் கடும் புயல் 40 பேர் பலியாகினர்

(ரொக்கியோ)

ஜப்பானில் நேற்று வீசிய கடும் புயலினால் சுமார் 40 பேர் பலியாகினர் மற்றும் பலர் காணாமல் போயுள்ளனர்.

சுமார் 90 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய "யான்சி" என பெயரிடப்பட்டிருக்கும் இப்புயல் ஜப்பானின் வடக்குத்திசை நோக்கி வேகம் தணித்துநகர்வதாக வானிலை அறிஞர்கள் கூறுகின்றனர்.

கடந்த பத்து ஆண்டுகளில் ஜப்பானில் வீசியிருக்கும் கடுமையான புயல் இது வென கணக்கிடப்பட்டிருக்கின்றது.

## இந்திய-சீன எல்லைக்கோடு இலக்கம் காணப்படும்

(டில்லி)

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் நாளை மேற்கொள்ளவிருக்கும் சீனப் பயணத்தின் போது இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையிலான உண்மையான எல்லைக் கோடு எது என்பது தொடர்பாக இணக்கம் ஒன்று எட்டப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லியில் நேற்று இதனை செய்தியாளர்களுக்கு மத்தியில் தெரிவித்த வெளியுறவுச் செயலாளர் ஜே. என். டிக்சிட் இது பற்றி மேலும் கூறுகையில், கூட்டு செயற்குழுவின் மூன்று சுற்றுப் பேச்சுக்களின் போது உண்மையான கட்டுப்பாட்டுக் கோட்டின் இரு பகுதியிலுமுள்ள நிலைமைகள் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளன என்றும் தெரிவித்தார்.

ஏவுகணைகளையும், ஏவுகணைத் தொழில் நுட்பத்தையும் சீனா பாகிஸ்தானுக்கு விற்பனை செய்திருப்பது தொடர்பாகவும் இந்தியா கவனத்தில் கொண்டுள்ளது எனக் குறிப்பிட்ட டிக்சிட், மேலும் கூறுகையில் இது இந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயம் என்றும், உண்மையான நிலையில் இந்தியா இதனைச் சமாளிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## வலுக்குறைந்தோர் விபரம் திரட்டப்படுகிறது

(தொல்புரம்)

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் அண்மையில் ஏற்பாடு செய்திருந்த ஆய்வுப்பட்டறையின் போது நியமிக்கப்பட்ட நடவடிக்கைக் குழுவினர் வலுக்குறைந்தோர் பற்றிய விபரங்கள் திரட்டும் நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளனர்'

தற்போது அரச அதிபரின் உதவியுடன் கிராம சேவை அலுவலர்களின் ஊடாக உழைப்பாளரை இழந்த பெண்களின் விவரங்களை சேகரிப்பதில் இக் குழுவினர் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

இத் தகவல்களின் அடிப்படையிலேயே எதிர்காலத்தில் இவர்களுக்கான புனர்வாழ்வுத் திட்டங்கள் வகுக்கப்படவுள்ளதால் பாதிக்கப்பட்ட பெண்களும், வலுக்குறைந்தோரும் தமது பகுதி கிராமசேவை உத்தியோகத்தர்களிடம் தம்மைப் பற்றிய விபரங்களை பதிந்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். [41]

## வர்த்தகத் துறைக்கு 4500பேர் பதிவு

1991ஆகஸ்டில் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றிய வர்த்தக முகாமைத்துவத்துறை மாணவர்களின் வடபகுதியிலிருந்து யாழ். பல்கலைக் கழகத்திற்கு 4500பேர் தம்மை பதிவுசெய்துள்ளதாக பல்கலைக் கழக பரீட்சைப் பகுதி புள்ளி விபரத்திலிருந்து தெரியவந்துள்ளது. வர்த்தக முகாமைத்துவ முகாமைத்துவ துறைக்கு வருடாந்தம் 177பேர் வரையில் தகுதி பெறுவது குறிப்பிடத்தக்கது. (05)

## மருந்துகள் வந்தன

(தொல்புரம்)

## கல்வி அலுவலகம்

வலிகாமம் மேற்கு பிரதேச கல்வி அலுவலகம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் இயங்கவுள்ளது.

இவ் அலுவலகப் பிரிவில் சுமார் 40 பாடசாலைகள் இயங்கவுள்ளன. வட்டுக்கோட்டை கொத்தணி, சுழிபுரம் கொத்தணிகளைச் சேர்ந்த பாடசாலைகளும் பண்டத்தரிப்புக் கொத்தணியைச் சேர்ந்த சில பாடசாலைகளுமே வலிமேற்கு பிரதேச கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கவுள்ளன.

இக் கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக திரு. பி. வீரபத்திரன் நியமிக்கப்படவுள்ளார் எனவும் சுமார் 13 ஊழியர்கள் இங்கு கடமையாற்றுவார்கள் எனவும் அறியக்கிடக்கின்றது.

## உள்ளூர் பிரசுர கொள்வனவு மாநகர சபை ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் உள்ளூர்ப்பிரசுரங்களை கொள்வனவு செய்யவசதியாக யாழ். மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கென ஒவ்வொரு சனசமூக நிலையங்களும் தலா 1000 ரூபாவிற்கு உள்ளூர்ப் பிரசுரங்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபைக்குட்பட்ட சுமார் 64 சனசமூக நிலையங்களில் 10 சனசமூக நிலையங்கள் ஏற்கனவே மேற்படி உள்ளூர்ப்பிரசுரங்களைக் கொள்வனவுசெய்துள்ளன என யாழ் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## விவசாயக் கடன்

அராலி தெற்கு ஐக்கிய நாணய சங்கம் எதிர்வரும் பெரும் போக நெற் செய்கையில் ஈடுபடும் தமது சங்க அங்கத்தவர்களை ஊக்குவிக்குமுகமாக குறைந்த வட்டியில் விவசாயக் கடன் வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் கடந்த சிறுபோகத்தின் போது உப உணவுச் செய்கையில் ஈடுபட்ட அங்கத்தினருக்கும் விவசாயக்கடன்வழங்கி ஊக்குவித்தனர். [41]

## கருத்தரங்கு

தென்மராட்சி கல்விக் கோட்ட வரணி, கொடிகாமம், உசன் பிரதேசத்திற்கு உட்பட்ட ஆரம்ப பாடசாலை அதிபர்களுக்கும், பகுதி தலைவர்களுக்குமான கருத்தரங்கு திங்கட் கிழமை காலை 8-00 மணியில் இருந்து மாலைவரை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் இடம்பெறும் இக் கருத்தரங்கில் யாழ். மாவட்ட ஆரம்ப பாடசாலையின் பொறுப்பாளரும், யாழ் மாவட்ட பிர

### கடலடியூடாக

# கொழும்பிலிருந்து தொடர்பு கேபிள்கள்

[கொழும்பு]

தென்கிழக்காசியா, மத்திய கிழக்கு, மேற்கு ஐரோப்பா ஆகிய மூன்று பிராந்தியங்களுக்கு இடையே தொலைத் தொடர்பை விஸ்தரிக்கு முகமாக கடலுக்கு அடியில் தந்திக் 'கேபிள்கள்' புதைக்கும் பணி கடந்த முதலாம் திகதி கொழும்பு காலிமுகத் திடல் கடல்பரப்பிலிருந்து சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நீர்மூழ்கிக் கப்பல் மூலம் இந்த கேபிள்கள் கடலுக்கு அடியில் மண்தோண்டி புதைக்கப்படவுள்ளன. கொழும்பிலிருந்து பம்பாய்க்கு சுமார் 3180 கிலோ மீற்றர் தூரம் கேபிள் புதைக்கும் பணியே தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கேபிள்கள் கடலுக்கு அடியில் ஆயிரம் அடி தூரத்திற்கு நிலத்தை தோண்டி புதைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## படைமுகாம் காரணமாக மக்கள் அகதிமுகாமில்

படையினர் முகாமிட்டிருப்பதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கள்ளியங்காடு, மண்டூர், கொக்குவில் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் பலரும் அகதிமுகாம்களில் தங்கியிருக்க வேண்டிய நிலை நீடித்து வருகின்றது அகதிகள் மீளக் குடியமர வேண்டுமானால் படையினர் விலகவேண்டும்என்று மட்டக்களப்பு வாசிகள் பலரும் தெரிவித்துள்ளனர்.

மீளக் குடியமரக் கூடிய வகையில் படையினர் வீடுகளை விட்டு வெளியேறவேண்டும் அல்லது வீடுகளுக்கான உரிய வாடகையையாவது தரவேண்டும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## மன்னார் காடுகளில் புக்காரா குண்டுவீச்சு

மன்னார் கட்டையடம்பன் காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் இரு புக்காரா விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின. நேற்று முன்தினம் மதியம் 12 30 மணியளவில் இத்தாக்குதல் நடைபெற்றது.

பின்னர் மாலை 4மணியளவில் பரப்புக்கடந்தான் காட்டுப் பகுதியிலும்புக்காரா விமானங்கள் இரு குண்டுகளை வீசின.

## இடைக்கால கவுன்சில் நியமிக்க வேண்டும்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு நிர்வாகத்திற்காக இடைக்காலக் கவுன்சில் ஒன்றை நியமிக்குமாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் ஜனாதிபதி டி. பி விஜயதுங்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குழப்ப நிலை உள் இந்த

அஷ்ரப்

மாகாணங்களுக்கு இடைக்கால கவுன்சில் ஒற்றை நியமிப்பதற்கு அரசியல் யாப்பில் ஏற்பாடுகள் இல்லாமை தடையாக இருக்கக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சுதந்திரக்கட்சி மாநாடு டிசம்பரில் நடைபெறும்

[கொழும்பு]

சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாட்டை எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன் கூட்டி புதிய உத்தியோகத்தர்களை தெரிவுசெய்வேன் என்று சுதந்திரக்கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். வருடாந்த மாநாடு டிசம்பர் மாதம் நடைபெறும்.

பிரதேச மட்டத்திலும் கிளைகள் மட்டத்திலுமாக கட்சி அமைப்புகள் தற்போது புனரமைப்பு செய்யப்படுகின்றது.

## அதிகாரி

## நிதி ஒதுக்கீடு

வலிமேற்கு பிரதேச சபைப் பிரிவில் உள்ள 4 பொது நூலகங்களுக்கு நூல் கொள்வனவு

## பதவி வெற்றிடங்கள்

இந்தியப் பிரதமர் நரசிம்ம மராவ் நாளை மேற்கொள்ள விருக்கும் சீனப் பயணத்தின் போது இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையிலான உண்மையான எல்லைக் கோடு எது என்பது தொடர்பாக இணக்கம் ஒன்று எட்டப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லியில் நேற்று இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த வெளியுறவுச் செயலாளர் ஜே. என். டிக்சிட் இது பற்றி மேலும் கூறுகையில், கூட்டு செயற்குழுவின் மூன்று சுற்றுப் பேச்சுக்களின் போது உண்மையான கட்டுப்பாட்டுக் கோட் நிலைகளை உறுதிப்படுத்தப் பட்டு உள்ளன என்றும் தெரிவித்தார்.

ஏவுகணைகளையும், ஏவுகணைத் தொழில் நுட்பத்தையும் சீனா பாகிஸ்தானுக்கு விற்பனை செய்திருப்பது தொடர்பாகவும் இந்தியா கவனத்தில் கொண்டுள்ளது எனக் குறிப்பிட்ட டிக்சிட், மேலும் கூறுகையில் இது இந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயம் என்றும், உண்மையான நிலையில் இந்தியா இதனைச் சமாளிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.


## பதவி வெற்றிடங்கள்

**கிளிநொச்சியில்**
**இயங்கிக்கொண்டிருக்கும் அச்சகத்திற்கு**

**பக்கம் கட்டுநர்,**
**அச்சுக் கோர்ப்பாளர்,**
**சிலின்டர், பிளேற்றன்**
**இயந்திர இயக்குநர்,**
**பைண்டேர்ஸ்**
ஆகியோர் தேவைப்படுகின்றனர்.

சம்பளத்துடன் தங்குமிடவசதியும், சாப்பாடும் ஒழுங்கு செய்து தரப்படும்.
நேரில் வரவும்.

**ஈழநாதம்**
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
(இ)

**யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்**
**"Battle of the Bulge"**
**பல்ஜ் சமர்**
(தமிழாக்கம்)
டாங்கிகள் மூலம் மோதிக்கொள்ளும் பயங்கர சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்
தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6. 00மணி (சி-7352)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


ரங்களின் இரட்டும் நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளனர்'

தற்போது அரச அதிபரின் உதவியுடன் கிராம சேவை அலுவலர்களின் ஊடாக உழைப்பாளரை இழந்த பெண் களும், வலுக்குறைந்தோரும் தமது பகுதி கிராமசேவை உத்தியோகத்தர்களிடம் தம்மைப் பற்றிய விபரங்களை பதிந்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். [41]

# வர்த்தகத் துறைக்கு 4500பேர் பதிவு

1991 ஆகஸ்டில் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றிய வர்த்தக முகாமைத்துவத்துறை மாணவர்களில் வடபகுதியிலிருந்து யாழ். பல்கலைக் கழகத்திற்கு 4500பேர் தம்மை பதிவுசெய்துள்ளதாக பல்கலைக் கழக பரீட்சைப் பகுதி புள்ளி விபரத்திலிருந்து தெரியவந்துள்ளது. வர்த்தக முகாமைத்துவ துறைக்காக பதிவு செய்த மாணவர்களின் அதிகரித்த மொத்தப் புள்ளிகளின் விபரமும், தொகையும் வருமாறு: 250 புள்ளிகளுக்குமேல் பெற்றவர்கள் 213பேர், 255புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் 187 பேர், 260 புள்ளிகளுக்கு மேல் 131பேர்.

இந்த விசேட பரீட்சையில் 240க்கும் 250க்கும் இடைப்பட்ட புள்ளிகளை 60 சதவீத மாணவர்கள் பெற்றுள்ளனர். யாழ். பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ துறைக்கு வருடாந்தம் 177பேர் வரையில் தகுதி பெறுவது குறிப்பிடத்தக்கது. (05)

**சவுக்கடி**

மீன்பிடி வலைகளிலுள்ள மிதவைகளுக்கு வேட்டுக்களை தீர்த்துவிட்டு சற்று தூரச் சென்று குடிமனைகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதில் சுழிபுரம் மேற்கு நாச்சிமார் கோவில் கட்டடங்கள் சேதமடைந்தன. இதேவேளை மீனவர்கள் எவரும் காயமெதுவுமின்றி கரை திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (41)

**தியாகி**

தொடக்கம் மாலை 5-00மணி வரை நடைபெறவிருக்கின்றது. வட்ட மட்டத்தில் நடைபெறும் உண்ணாவிரதத்தில் பொதுமக்கள், பொது ஸ்தாபனங்கள், சங்கங்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் சுழற்சி முறையில் பங்குபற்றவுள்ளனர்.

இறுதி நாள் 26-09-93ல் கோட்ட மட்டத்தில் பொதுப் பந்தல் அமைக்கப்பட்டு காலை 8 00மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டு, பொதுக் கூட்டங்களும் நடைபெறவிருக்கின்றன. மேலும் முக்கிய இடங்களில் பொது அமைப்புக்கள் இலங்கள் முன்பாக பந்தலிட்டு தியாகி திலீபனின் நினைவுப் படங்களும் வைக்கப்பட்டு மரியாதை செலுத்தப்படும்.

## மருந்துகள் வந்தன

(தொல்புரம்)

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களப் பகுதியினருக்கு மூன்றுமாதங்களுக்குத் தேவையான மருந்துவகைகள், தடுப்பூசி மருந்துகள் கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன.

மேற்படி மருந்துவகைகள் யூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களுக்கு உரியனவெனவும் இவை வெகுவிரைவில் அரசினர் வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாகவும் சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (41)

**பொருள்கள்**

காலை மேற்படி துறைமுகத்தை வந்தடைந்ததும் உடனடியாகவே பொருள்களை இறக்கும் வேலைகள் ஆரம்பமாகும்.

கடந்த சில நாட்களாக மேற்படி துறைமுகத்தினூடாகப் பொருள்களை இறக்கும் வேலைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இன்று மீண்டும் வழமைபோல் பொருள்களை இறக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான சகல முன்னேற்பாடுகளும் நேற்று மாலையுடன் மேற்கொள்ளப்பட்டுவிட்டன.

மேற்படி ஏற்பாடுகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் யாழ். செயலக அதிகாரிகளான திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் மற்றும் திரு. விக்னேஸ்வரமூர்த்தி ஆகியோர் நேற்று ஈடுபட்டனர்.

மேற்படி துறைமுகத்திலிருந்து அகற்றப்பட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கொடி மீண்டும் மேற்படி துறைமுகப் பகுதியில் நேற்று மாலை 4 30 மணியளவில் கட்டப்பட்டது. அத்துடன் மேற்படி துறைமுகத்தில் கடமையாற்றும் துறைமுகத் தொழிலாளர்களுக்கும் இன்றைய வேலை குறித்து முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. (க)

சோயா கடன் வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் கடந்த சிறுபோகத்தின் போது உப உணவுச் செய்கையில் ஈடுபட்ட அங்கத்தினருக்கும் விவசாயக்கடன்வழங்கி வைக்குவித்தனர். [41]

## கருத்தரங்கு

தென்மராட்சி கல்விக் கோட்ட வரணி, கொடிகாமம், உசன் பிரதேசத்திற்கு உட்பட்ட ஆரம்ப பாடசாலை அதிபர்களுக்கும், பகுதி தலைவர்களுக்குமான கருத்தரங்கு திங்கட் கிழமை காலை 8-00 மணியில் இருந்து மாலைவரை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் இடம்பெறும் இக் கருத்தரங்கில் யாழ். மாவட்ட ஆரம்ப பாடசாலையின் பொறுப்பாளரும், யாழ் மாவட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளருமான திரு இரா. சிவானந்தம் அவர்கள் கலந்து கொள்வார். (86)

## ஊழியர் பற்றாக்குறை

[கொழும்புத்துறை]

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் கடமையாற்ற சிற்றூழியர்களுக்குப் பெரும்பற்றாக்குறை நிலவி வருகிறது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளன. [24]

**கடற்**

திறமை உடையவர்கள் என்பதை சிறிலங்கா கடற்படை அதிகாரிகளே ஒப்புக் கொள்கிறார்கள் என்று தெரிவித்த ஆசியன் கருணநாயக்கா கடற்புலிகளின் உண்மையான பலம் இன்னும் தெரியாத தொன்றாகவே உள்ளது என்றார்.

**ஜேர்மனி**

டொலர்களை (1 லட்சத்து80 ஆயிரம் ரூபா) செலுத்தியிருந்தனர். இவர்கள் தத்தமது தாய்நாடுகளுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள் என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**வாதுவ**

த்தில் தரித்து நிற்கிறது. அடுத்த சில தினங்களில் இக் கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை நோக்கி புறப்படவுள்ளது.

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த சமயம் திடீரென திருமலைக்குத் திரும்பிச் சென்ற இக் கப்பலில் திருக்கோணமலைத் துறைமுகத்தில் வைத்து மேலும் சுமார் 2500 மெற்றிக்தொன் மா ஏற்றப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. [க]

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் ஜனாதிபதி டி. பி விஜயதுங்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குழப்ப நிலை உள் இந்த மிப்பதற்கு அரசியல் யாப்பில் ஏற்பாடுகள் இல்லாமை தடையாக இருக்கக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சுதந்திரக்கட்சி மாநாடு டிசம்பரில் நடைபெறும்

[கொழும்பு]

சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாட்டை எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன் கூட்டி புதிய உத்தியோகத்தர்களை தெரிவுசெய்வேன் என்று சுதந்திரக்கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார். வருடாந்த மாநாடு டிசம்பர் மாதம் நடைபெறும்.

பிரதேச மட்டத்திலும் கிளைகள் மட்டத்திலுமாக கட்சி அமைப்புகள் தற்போது புனரமைப்பு செய்யப்படுகின்றது.

## அதிகாரி தற்கொலை

ஓய்வு பெற்ற இராணுவ சார்ஜன் மேஜர் ஒருவர் தனது கடையில் வைத்து விஷம் அருந்தி தற்கொலை செய்தசம்பவமொன்று மாத்தறையில் இடம் பெற்றுள்ளது எஸ்.பி.எச் பியசிறி (வயது 53) என்பவரே இவ்வாறு விஷமருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

## தையல் பயிற்சி வகுப்புகள்

[கொழும்புத்துறை]

வடமராட்சி கிழக்கில் மாமுனை, நாகர்கோவில் ஆகிய பகுதிகளில் யாழ். மனிதமுன்னேற்ற நடுநிலையத்தால் அண்மையில் தையல் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன [24]

## சிவானந்த ஜெயந்தி விழா

தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கம் நடத்தும் சிவானந்த ஜெயந்தி விழா இன்று காலை 8 00 மணியளவில் தென்மராட்சியிலுள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## நிதி ஒதுக்கீடு

வலிமேற்கு பிரதேச சபைப் பிரிவில் உள்ள 4 பொது நூலகங்களுக்கு நூல் கொள்வனவு செய்வதற்காக ரூபா ஐம்பதினாயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

சுழிபுரம் பொது நூலகம், அராலி பொது நூலகம், வட்டுக்கோட்டை பொதுநூலகம் ஆகியவற்றிற்கு ரூபா பத்தாயிரம் வீதமும், சங்கானை பொது நூலகத்திற்கு ரூபா இருபதாயிரமுமாக மொத்தம் ரூபா ஐம்பதாயிரம்வலிமேற்கு பிரதேச சபையினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கல்வி, கட்டடக் கல்வி சம்பந்தமான நூல்களுக்கு முன்னுரிமை கொடுத்து நூல்களை கொள்வனவு செய்யவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஈரான் நிதி உதவி

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு பொத்துவில் ரயில் பாதை அமைக்க ஈரான் நிதி உதவி வழங்கியுள்ளது ஈரானிலிருந்து வந்திருந்த விசேட தொழில்நுட்ப குழு ஒன்று பெருமளவுக்கு முஸ்லிம்கள் வசிக்கும் இப்பகுதியூடாக அமைக்கப்படும் ரயில்பாதை தொடர்பான ஆய்வை மேற்கொண்டது.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 04-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10792

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-0528, 26-1321, 28-5862, 24-4560, 24-4282
24-7961, 28-1110, 27-5775, 26-3177, 26-7525
41-9111, 26-4429.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-6119, 28-4255, 26-8223, 24-9938, 41-9663
24-7941, 25-8866, 24-4350, 27-1122, 42 3615
43-4045, 42-1623, 24 8558, 24-7628, 22-3887
24-5939, 43-2524, 42-0488, 41-5668.